MASTER NEGATIVE NUMBER

6153.55

ஊழியன்
மலர் 8, இதழ் 12
December 13, 1927

Record no. 148

Ūḻiyaṉ

Malar 8, itaḻ 12

December 13, 1927

Record no. 148

சென்னைப் பதிவு எண் கரு0௧

இதன் விலை அணா ஒன்றரை.

தந்தி விலாசம்—"OOLIAN."

ஊழியன்

சந்தா விபரம்.

வருடச் சந்தா ...	௩—0—0
ஆறுமாதச் சந்தா ...	க—0—0
வெளிநாடு வருடச் சந்தா	௪—0—0

செவ்வாய்தோறும் நிகழ்வது.

விளம்பர விகிதம்.

அங்குலம் ௧க்கு வாரம் ௧க்கு 0—அ—0
நீடின்ற விளம்பரம் அங். ௧க்கு ௧—0—0
ஒப்பந்த விளம்பரவிகிதத்திற்குக்காரியஸ்தருக்கு எழுதவும்.

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. —திருக்குறள்.

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். —திருக்குறள்.

மலர் அ. காரைக்குடி. பிரபவ-ஆ கார்த்திகை௴ உஅஉ (கடு—கஉ—உஎ) இதழ் கஉ

மலர்மணம்.

முற்போக்கு

(வ. ரா.)

"நாம் முற்போக்கு அடைய வேண்டும்" என்று தலைவர்களும் பிரசங்கிகளும் எப்பொழுதும் கூறுவதை நண்பர்கள் கேட்டிருப்பார்கள். முற்போக்கு என்ற சொல்லை வழங்குவது எளிது. உண்மையிலேயே எந்த மனிதனும் எந்தச் சொல்லையும் எளிதிலே உபயோகித்து விடலாம். சொல்லின் பொருளை உணர்ந்து சொல்லுபவர்கள் மிகச் சிலரே யாவர். கடவுள் என்கிறோம். சத்தியம் என்கிறோம். பாப புண்ணியம், நன்மை தீமை என்கிறோம். உண்மையிலேயே, மேற்கூறிய சொற்களின் பொருளை நம்மில் எத்தனை பேர்கள் உணர்ந்திருப்பார்கள்? இந்தக் கேள்வியை கேட்டாலே, பலருக்குக் கோபம் வரும். பாஷை ஏற்படுவதற்கு முன், மனிதர்கள் யாவரும் உண்மை வாழ்வு வாழ்ந்திருக்கக் கூடும் போலும்! சிறு குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளை, தங்கள் மனம்போனபடி உபயோகப் படுத்துவதைப் பார்த்திருக்கிறோம். அதுபோலவே, மனிதர்கள் சொற்களை இக்காலத்தில் உபயோகப் படுத்துகின்றார்கள்.

* * *

நெருப்பு என்றால் வாய் வெந்துபோய்விடமாட்டாது. தேன் என்றால் நாவில் உருசியும் உண்டாகிவிடமாட்டாது. முற்போக்கு என்று அனவரதமும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தால் மட்டும், முற்போக்கு வந்துவிடுமோ? அற்புதங்கள் நிகழக் கூடியன வல்லவென்றும் நிகழ்ச்சிகள் யாவும் காரண காரிய விதிக்குக் கட்டுப்பட்டவை யென்றும் கூறும் மனிதர்கள் முற்போக்கு விஷயத்தில் அற்புதத்தை வேண்டுகின்றார்கள், அல்லது எதிர் பார்க்கின்றார்கள். முற்போக்கு என்பதொரு நிலை. அந்த நிலைவருவதற்குரிய சாதனங்களும் முயற்சியும் உழைப்பும் தேவை. இவை மூன்றும்இல்லாத விடத்து, முற்போக்கை எதிர்பார்க்கும் மனப்பான்மை மூடபக்தி கொண்டதாகும், அற்புதத்தை நாடியதாகும்.

* * *

மேலும் முற்போக்கு என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் வேண்டும். கடவுள் என்ற சொல்லைப்போல, முற்போக்கு என்ற சொல்லும் ஆகிவிடுதல்கூடாது. கடவுள்என்று எல்லோரும்கத்துகிறார்கள் அவர்களில்எத்தனை பேர்களுக்கு, கடவுளின் தன்மையும்கடவுளின் பெருமையும் கடவுளின் தேவையும் தெரியும்? காந்தியை மகாத்மா என்று அழைக்கும் கோடிக்கணக்கான ஜனங்களில் எத்தனை பேர்களுக்கு மகாத்மாவின் தன்மை தெரியும்? சொல்லின் பொருளை உணராமல் அதை வழங்குவது அந்தச் சொல்லுக்கு அவமதிப்பைத் தேடுவதாகும், அளிப்பதாகும். இந்த இரகசியத்தைப் பெரும்பான்மையோர் அறிவதில்லை.

சுவையோடு உண்ணும் உணவு அமுதமாகும். உருசிதவறி உண்பது விஷமாகும். அந்த உணவு இறுதியில் இமைதாதனுக முடியினும் முடியும். ஜீரணம் செய்யக் கூடிய அளவிலேதான் ஒருவன் உணவை உட்கொள்ள வேண்டும். அவ்வளவுக்குத் தான் அவன் உரியவனுவான். உரிமைக்கு மீறி நடந்தால், அவன் அஜீரணம் என்ற இயற்கையின் தண்டனைக்கு உள்ளாகின்றன். இதை நன்றாகத் தெளிவாக, எல்லோரும் அறிந்திருப்பினும், இந்த விதியை மீறி நடக்கின்றார்கள். அப்படியிருக்க, சொல்லின் பொருளை உணர்ந்து, அதை உபயோகப்படுத்தாதவனுக்கு அறிவில், வளர்ச்சியில் அஜீரணம் ஏற்பட்டு விடும் என்றால், அதைப் பெரும்பான்மையோர் நம்பக் கூடமாட்டார்கள். எனவே, அஜீரணம் நேருவதை அவர்கள் எவ்வாறு அறியப் போகின்றனர்?

* * *

முற்போக்கைப்பற்றிக் கூச்சலிடும் நண்பர்களை, சில கேள்விகள் கேட்க வேண்டும். முற்போக்கு என்றால் என்னவென்று கேட்டால், அவர்கள் கேட்பவனைப் பார்த்து நகைப்பார்கள். "இது கூடவா உனக்குத் தெரியாது" என்று கேட்பார்கள். தெரியாது, சொல்லுங்கள் என்றால் விழிப்பார்கள். அறிவுவளர்ச்சி, மூட நம்பிக்கை குறைதல், சுதந்திரம், இவை போன்ற சொற்களை நிமிஷத்துக்கு நூறு தடவைகளுக்கு அதிகமாக வாரி இறைத்து, முற்போக்கை வருணிப்பார்கள். இவ்வளவு பிரசங்கப்புகை எதற்காக? உண்மையிலேயே, இவர்கள் கிளிப்பிள்ளைகளைப் போல வாதம் செய்வார்கள். மிஞ்சிச் சில கேள்விகள் கேட்டால், இவர்களுக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்துவிடும். முற்போக்கில் ஆவல் கொண்டவர்களின் மனப்பான்மைக்கு இது ஒரு மாதிரி போலிருக்கிறது என்று திரும்பிவருவதைத்தவிர நமக்கு வழியில்லை.

* * *

தொழில் தெரியாமல் வியாபாரம் செய்யத் துவக்குபவர்கள் மூடர்கள் என்று உலகத்தார் நகைக்கமாட்டார்களா? வண்டியையும் மாட்டையும் கொண்டுவா என்றால் மாட்டை ஓட்டிக் கொண்டும் வண்டியைக் கையினால் இழுத்துக் கொண்டும் ஒருவன் வருவானுகில், அவனுடைய அறிவை உலகத்தார் எவ்வாறு மதிப்பிடுவார்கள்? முற்போக்கைப் பற்றிப் பிரசங்கம் செய்பவர்கள், அதைத் தங்கள் வாழ்க்கையின் மூலமாய்த் தெளிந்து கொள்ள வேண்டும்; பின்னர் உலகத்தாருக்கு அதைத் தெளிவு படுத்த வேண்டும். முற்போக்கைப்பற்றிப் பேசும் மனிதர்களிற் பெரும்பான்மையோர் பொய்யர்களாகவும் அறிவிலிகளாகவும் கோழைகளாகவும் இருப்பதை நண்பர்கள் அறிவாளர்கள். தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்கு, முற்போக்கு என்ற சொல் அவர்களுக்குச்சிறந்த கருவியாக அமைந்துகிடக்கின்றது. காலம்என்ற காற்று இத்தகைய முற்போக்குப் பதர்களை வெளியே கொண்டுவந்து தள்ளிவிடும்.

* * *

ஒரு நாட்டுக்கு மிதமிஞ்சிய செல்வம் ஏற்பட்டு விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அந்த நாடு முற்போக்கு அடைந்து விட்டதாகக் கூறிவிடலாமா? அதாவது தனவந்தர்களை முற்போக்காளர்கள் என்று கூறுதல் கூடுமா? செல்வம் முற்போக்குக்குக் குறுக்கே நிற்கின்றது என்று முற்போக்கு அடைந்த மனிதர்கள் சொல்லுகிறார்கள். இது உண்மை என்றும் உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே, செல்வத்துறையில் உழைத்தால், ஒருவன் முற்போக்கு அடைந்துவிட முடியாது என்பது கொள்ளக்கிடக்கின்றது. பொருளீட்டலுக்கும் முற்போக்குக்கும் தொடர்பு இல்லை என்பது தெளிவு.

* * *

பின்னை, முற்போக்கு என்பதுயாது? குழப்பத்தின் மூலமாய் முற்போக்கைக்காணமுடியாது, முற்போக்குநிலையில் குழப்பத்தைக்காணமுடியாது குழப்பத்தைவேண்டுபவர்கள், முற்போக்கை நாடவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். பெரிய பேச்சுகள் பேசலாம். ஆனால் அந்த பேச்சுக்களைத் தாங்கி நிற்கும் மனப்பான்மையையும் நிலைமையையும் கொண்டோன், அந்த மனிதனுடைய சக்தியை அளக்கவேண்டும். "நான் என் பகைவனை பிடித்துக்கொண்டேன்" என்றான் ஒருவன். "அவ்வாறயின், அவனை விட்டு விட்டு வா" என்றான் அவன் நண்பன். இவ்வளவோடு இதைக் கேட்பவர்கள் பகைவன் தோற்கடிக்கப் பட்டான் என்று எண்ணுவார்கள் ஆனால் நிகழ்ந்ததென்ன? "நான் விட்டு விட்டுவரத் தயாராகவிருக்கிறேன். ஆனால் பகைவன் என்னை விடமாட்டேன் என்கிறான்" என்று அந்த மனிதன் கூறினதாகக் கதை உண்டு. பகைவனிடம் இந்த மனிதன் தோற்றதுதான் உண்மை; இவனுடைய முந்திய விருதுப் பேச்சுப் போக்

* * *

முற்போக்கில் நாட்டம் கொண்டிருப்பவர்களுக்கு அடக்கமும் துணிவும் ஒருங்கே இருத்தல் வேண்டும். தன்னடக்க மில்லாதவனும் அறிவு தெளிவில்லாதவனும் கனவிலும் துணிவைக் காணுதவனும் முற்போக்கை அடைய முடியாது. ஒரு காந்தியினிடம் சிறப்பாக அமைந்து கிடக்கும் தன்மைகள் நாட்டின் பொதுவான தன்மைகளாக மாறிவிடின், அந்த நாடு முற்போக்கு அடைந்து விட்டதாகச் சொல்லலாம். செல்வம் மிகுந்து கிடக்கும் அமெரிக்க ஜனசமூகத்தில் குற்றங்கள் குறையாமல் மலிந்து கிடக்கின்றன. அந்த நாடு முற்போக்கு எய்திவிட்டதாகச் சொல்ல முடியுமா? உருவத்தில் பருத்தவன் உறுதியில் வலுத்தவன் என்று கூறுதல் முடியாது. உயர்ந்த தன்மைகளை அடையப் பெறுவதுதான் முற்போக்கு நிலையாகும். செல்வம் முதலிய புறச்சாதனங்களைப் பெறுவதினாலே, ஒரு மனிதனோ, ஒருநாடோ முற்போக்கு அடைந்து விட்டதாகச் சொல்லமுடியாது.

* * *

தான் அடங்கத் தன்குலம் அடங்கும் என்பார்கள். இங்கே, அடங்க என்பதற்கு அடிமையாக என்பது பொருள் அல்ல. எவன் ஒருவன் அடக்கத்துடன் ஆனால், துணிவுடன் உழைக்கின்றானே, அவனுக்கு வெற்றிவருவது நிச்சயம். அவன் எடுத்துக் கொள்ளும் வேலை யாவற்றிலும் முற்போக்கைக் காணலாம். முற்போக்கின் பொருட்டு, அவனுடன் ஒத்துழைக்கலாம். ஆனால்; முற்போக்கு இன்னதென்று அறியாமல், வெறும் ஆரவாரம் செய்பவர்களால், ஒரு சமூகமாவது, ஒரு நாடாவது முற்போக்கு அடைந்துவிட முடியாது. உயர்ந்த தன்மைகளின் வளர்ச்சி நிலைதான் முற்போக்கு நிலைமையாகும். எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற எண்ணமில்லாதவன் முற்போக்கை நாடியடைய முடியாது.

மகாத்மாவின் வருணாச்சிரமம்,

[திரு. மகாதேவ தேசாய அவர்கள் "இளமை இந்தியா"வின், நவம்பர்மீ உசஉ இதழில் எழுதியுள்ளதொரு 'விருவிடை'க்கட்டுரையின் ஒரு பகுதியை "ஊழிய"னின் சென்றவார இதழில் வெளியிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியான பின்வரும்பகுதியையும் இங்கு தருகிறோம்-ப. ர்., ஊழியன்.]

கேள்வி:—அதெல்லாம், உயர்ந்த நிலைமைகளிலேயேயாகும். ஆனால், ஒவ்வொருவரும் நல்லவருமானங்கிடைக்கும் தொழில்களை இச்சித்துக் கொண்டிருக்கும் இக்காலில், என்ன செய்யலாமென்று நீங்கள் கூறுகிறீர்கள்?

பதில்:—விலக்கேயில்லாமல் ஒரேயடியாய்ப் பொதுவிதியாகக் கூறுவதாகும் நீங்கள் சொல்லுவது. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பையன்களை ஒன்றாய்ச் சேருங்கள்; பள்ளிப்படிப்புத் தேவையான தொழில்களை அந்தப்பையன்களில் நூற்றுக்கு எத்தனை பேர் தேடுகிறார்கள் என்று நிர்மானியுங்கள். வழிபறிக் கொள்ளையடித்தல் எல்லாருக்கும் கிடைக்காது. வழிபறிக் கொள்ளையடிப்பதற்காகவே, இப்பொழுது கிளர்ச்சி நடப்பதாகத் தோன்றுகிறது. எத்தனைபேர் வக்கீல்களாகவும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும், ஆகமுடியும்? டணம் சட்டுவதில் நியாயமாக அமர்ந்திருக்கக் கூடியவர்கள் வைசியர்களே. அதிலும் கூட, அவர்கள் தொழில் வழிபறிக் கொள்ளையாக ஆகும் பொழுது, அதுவும் வெறுக்கத்தக்கதே. கோடிக்கணக்கான கோடீச்வரர்கள் இருக்க முடியாது.

கேள்வி:—தமிழ்நாடு சம்பந்தப்பட்டவரையில், பிறப்பால் தங்களுக்கில்லாத தொழில்களையே பிராம்மணரல்லாதார் யாவரும் கைக்கொள்ள விரும்புகிறார்கள்.

பதில்:—இரண்டு கோடியே இருபது லட்சம் தமிழர்களின் சார்பாக நீங்கள் பேசும் உரிமையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் உங்களுக்கு ஒரு கோட்பாட்டைத்தருகிறேன்—ஏனைய ஒவ்வொருவரும் எவ்வாறு ஆகமுடியாதோ அவ்வாறு ஆக நாம் விரும்பாதிருக்க வேண்டும். நான் வர்ணத்தைக் குறித்து என்ன விவரணம் கூறியிருக்கிறேனோ அந்த அடிப்படையின் மேலேயே இந்தக் கோட்பாட்டை நீங்கள் அனுபவத்தில் நடத்த முடியும்.

கேள்வி:—வர்ண தர்மம் நமது உலகாயதப்பேராசையை அடக்குகிறது என்று நீங்கள் சொல்லிவருகிறீர்கள். அதெவ்வாறு?

பதில்:—எனது தந்தையின் தொழிலை நான் பின்பற்றும்பொழுது, நான் அதைக் கற்கப் பள்ளிக்கூடத்துக்குக் கூடப்போக வேண்டிய தேவையில்லை; நான் ஆன்மார்த்த இலட்சியங்களைக் குறித்து உழைக்க, எனது மனோசக்திக்கு விடுதலை கிடைக்கிறது. ஏனெனில், எனது பணம், அதாவது எனது ஜீவனம் பத்திரமாயிருக்கிறது. இன்பத்திற்கும், உண்மையான ஆன்மார்த்த இலட்சிய வேலைக்கும் சிறந்த பிணை (இன்ஷியூரன்ஸ்) ஆகும் வர்ணம். இதர விஷயங்களைத் தேடுவதில், எனது செயல்திறனைக் குவிப்பேனாயின், எனது ஆன்மானுபவ சக்தியை யெல்லாம் விற்று விடுவேன், அதாவது 'ஒரு கவளம் அன்னத்துக்காக' என் ஆன்மாவையே விற்றுவிடுவேன்.

கேள்வி:—ஆன்மார்த்தத்தைத் தேடுவதற்காக, மனோசக்திகளுக்கு விடுதலையளிப்பது குறித்து, நீங்கள் பேசுகிறீர்கள். இந்நாள் தங்கள் தந்தையின் தொழிலைப் பின்பற்றுவோருக்கு ஆன்மார்த்தக் கலையறிவே கிடையாது—அவர்களது வர்ணமே அவர்களை அதற்குத் தகுதியற்றவராகச் செய்திருக்கிறது.

பதில்:— வர்ணத்தைப்பற்றிக் கோணலான கருத்துக்களை வைத்துக்கொண்டு நாம் பேசுகிறோம். வர்ணம் உண்மையாகவே அனுஷ்டிக்கப் பட்டால், ஆன்மார்த்தப் பயிற்சிக்குப் போதிய சாவகாசம் நமக்கு இருக்கும். இப்பொழுதுங்கூட, (நகரங்களுக்கு) எட்டவுள்ள கிராமங்களுக்குச் சென்றீர்களாயின், நகரவாசிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கிராமவாசிகள் எவ்வளவு ஆன்மார்த்தக் கலையறிவு உடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் காண்பீர்கள். இவர்களுக்கு (நகரவாசிகளுக்கு)த் தன்னடக்க மென்பது தெரியாது.

ஆனால், தற்காலத்தின் தீமையை நாம் கண்டுபிடித்து விட்டோம். ஏனையோர் எவ்வாறு இருக்க முடியாதோ, அவ்வாறு நாம் இருக்க முயலலாகாது. விரும்பும் ஒவ்வொருவரும் அதைச்செய்ய முடியாதிருக்குமாயின், கீதையைக் கூட நான் கற்க விரும்பேன். அதனால்தான், டணம் திரட்டுவதற்காக ஆங்கிலம் படிப்பதற்கு விரோதமாக என் உள்ளம் எழுகிறது. நாம் நமது வாழ்க்கைகளை மறுபடி புதிதாய் ஒழுங்குபடுத்தவேண்டும். நம்மில் ஒரு சிறு பகுதியினர் இந்நாள் பெற்றிருக்கும் சாவகாசம் கோடிக்கணக்கான மகா ஜனங்களுக்கும் அதனால் கிடைக்கவேண்டும். வர்ண தர்மத்தை நாம் பின்பற்று விட்டால், அதை நாம் செய்யமுடியாது.

கேள்வி:— மறுபடியும் ஒரே கேள்வியை நாங்கள் கேட்பதற்கு எங்களை மன்னிக்க வேண்டும். அதை நன்றாய் விளங்கிக் கொள்ள, நாங்கள் விரும்புகிறோம். வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு தொழில்களைச் செய்யும் மனிதன் எந்த வர்ணத்தைச் சேர்ந்தவன்?

பதில்:—தனது தந்தையின் வர்ணத்தைப் பின்பற்றுவதால் தனது ஜீவனத்துக்கு அவன் சம்பாதித்துக் கொண்டிருக்கும் வரையில், அதில் ஒன்றும் வித்தியாசமில்லை. தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆசையால் அதைச் செய்யும்வரையிலும், தான் விரும்பும் எந்தத் தொழிலையும் ஒருவன் செய்யலாம். ஆனால், செல்வம் திரட்டுவதற்காக, அவ்வக்காலத்தில் தன் தொழிலை மாற்றிக்கொள்ளுபவன் தன்னைத்தானே கீழ்மைப்படுத்திக்கொண்டு, வர்ணத்தினின்றும் விழுந்து விடுகின்றான்.

கேள்வி:—ஒரு சூத்திரர் பிராமணரொருவருக்குள்ள தன்மைகளெல்லாம் பெற்றிருந்தாலும், அவர் பிராமணரென்று கூப்பிடப் படலாகாதா?

பதில்:—இப்பிறப்பில், அவர் பிராமணரென்று அழைக்கப்படாமலிருக்கலாம், மேலும் தாம் பிறக்காததொரு வர்ணத்தைத் தமக்குரியதென, தகாத உரிமை கொண்டாடாமலிருப்பது அவருக்கு நல்லதாகும். உண்மையான பணிவுக்கு அது ஓர் அடையாளமாகும்.

கேள்வி:—வர்ணத்துக்குச்சொல்லப்படும் குணங்கள் பிறப்பினால் எய்துவன, சம்பாதிக்கப்படுவனவன்று என்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:—அவற்றைச் சம்பாதித்துக் கொள்ள முடியும். பிறப்பால் எய்திய குணங்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம்; புதியகுணங்களைப் பயிற்சி செய்து கொள்ளலாம். ஆனால், செல்வம் திரட்டுவதற்கான புதிய வழிகளை நாம் தேடத்தேவையில்லை, தேடக்கூடாது. அவை தூய்மையானவையாக இருந்துவருமளவும், நாம் நமது முன்னோர்களிடமிருந்தும் வாரிசுக்கிரமமாய்க்கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

கேள்வி:— தனது குடும்பத்தினரின் குணங்களுக்கு எதிரிடையான குணங்களை ஒரு மனிதன் தோற்றுவதை நீங்கள் காண்பதில்லையா?

பதில்:— இதுஒரு கடினமான கேள்வியாகும். நமது பூர்வோத்தரங்கள் யாவும் நமக்கு தெரியாது. ஆனால், நான் உங்களுக்கு விளக்கியுள்ளதேபோல, வர்ண தர்மத்தைக்குறித்து விளக்கிக் கொள்ளுவதற்கு நீங்களும் நானும் இவ்விஷயத்தைக் குறித்து ஆழ்ந்தாழ்ந்து ஆராய வேண்டியதில்லை. என் தந்தை ஒரு வியாபாரியாக இருந்து, நான் ஒரு போர்வீரனின் குணங்களைக்காட்டினேனாயின், நான் பிரதிபலன் பெறாமல் எனது நாட்டுக்கு ஒரு போர்வீரனாக உழைக்கலாம்; ஆனால், வியாபாரத்தின் மூலம் எனது உணவுக்குச் சம்பாதித்துக் கொள்ளுவதில் நான் திருப்திபெற வேண்டும்.

கேள்வி:—நாம் இன்றதினம் ஜாதியைப் பார்க்கையில், அது சமபந்தி போஜனம் பற்றியும் கலப்பு மணம்பற்றியுமான தடைகளை மாத்திரமே அடக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, வர்ணத்தைப் பாதுகாப்பதற்கு, இத்தடைகளை வைத்துக் கொண்டு வரவேண்டுமா?

பதில்:—இல்லை, இல்லவேயில்லை. அதன் (வர்ணத்தின்) மிகத்தூய்மையான நிலையில், அதில் எவ்விதத்தடைகளுமிருக்க முடியாது.

கேள்வி:—அவற்றைவிட்டு விடலாமா?

பதில்:—விட்டு விடலாம். ஏனைய வர்ணங்களில் மணப்பதாலும் கூட, வர்ணம் அழியாமலே இருக்கிறது.

கேள்வி:—அவ்வாறாயின், தாயாரின் வர்ணம் பாதிக்கப்படுமே.

பதில்:—ஒரு மனைவி தன்கணவனது வர்ணத்தைப் பின்பற்றவேண்டும்.

கேள்வி:—வர்ணதர்மக் கோட்பாடு நீங்கள் விளக்குகின்ற வண்ணமே சாஸ்திரங்களில் காணப்படுகின்றதா? அல்லது நீங்கள் சொந்தமாகக் கூறுவதா?

பதில்:—எனது சொந்தமல்ல, அதை நான் பகவத்கீதையினின்றும் அறியவந்தேன்.

கேள்வி:—மனுஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கும் வர்ண தர்மக்கோட்பாட்டை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?

பதில்:— கொள்கை அதில் இருக்கிறது. ஆனால், அதில் கூறப்பட்டிருக்கும் அனுஷ்டானங்கள் பல எனக்குப் பிடிக்கவில்லை. அப்புத்தகத்தின் சில பகுதிகள் கடுமையாக ஆட்சேபிக்கத்தக்கனவாக இருக்கின்றன. அவை பின்னால் புகுத்தப்பட்டவை என்று நான் நம்புகிறேன்.

கேள்வி:—மனுஸ்மிருதியில் ஏராளமான அநீதி அடங்கியிருக்கவில்லையா?

பதில்:— ஆம்; பெண்களுக்கும், தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுவோருக்கும் ஏராளமான அநீதி அதில் அடங்கியிருக்கின்றது. சாஸ்திரம் என்று வழங்கப் பெறுவதெல்லாம் சாஸ்திரமல்ல. ஆகையினால், சாஸ்திரம் என்று கூறப்படுபவற்றை, மிகுந்த எச்சரிக்கையுடன் படிக்கவேண்டும்.

கேள்வி:— ஆனால், நீங்கள் பகவத்கீதையை அங்கீகரிக்கிறீர்கள். குணத்திற்கும் கர்மத்துக்கும் ஏற்றவாறுகும் வர்ணம் என்று அது கூறுகிறது. நீங்கள் பிறப்பைக் கொண்டு வந்ததெப்படி?

பதில்:— பகவத்கீதையை நான் போற்றுவதேனெனில், அந்த நூல் ஒன்றிலே மட்டிலும்தான், தூஷிக்கத்தக்க எதனையும் நான் காணவில்லை. கொள்கைகளை அது கூறிவிட்டு, அனுஷ்டானத்தை நாம் கண்டு கொள்ளுமாறு, அது விட்டுவிடுகிறது. தன்மைக்கும், கன்மத்துக்கும் ஏற்றவாறுகும் வர்ணம் என்று கீதை கூறுகிறது; ஆனால், தன்மையும், கன்மமும் பிறப்பினால் கிடைக்கின்றன. எல்லா வர்ணங்களும் என்னால் சிருஷ்டிக்கப் பட்டன—சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம், என்று பிரபு கண்ணன் கூறுகிறார்; அதாவது, பிறப்பால் என்று நான் கருதுகிறேன். பிறப்பால் என்றில்லாவிட்டால், வர்ண தர்மம் என்பதற்குப் பொருள் இல்லை.

கேள்வி:— ஆனால், வர்ணத்தில் உயர்வு என்பது கிடையாதா?

பதில்:— கிடையாது, கிடையவே கிடையாது; என்றாலும், தலை எப்படி உடலின் உச்சியாக விருக்கிறதோ அவ்வாறே பிராமணீயம், வர்ணங்களின் முடிவாகும் என்று நான் சொல்லுகிறேன். அதன் கருத்து, உயர்ந்த தொண்டைச் செய்வதற்கான திறமை என்பதாகும்; ஆனால், உயர்ந்த அந்தஸ்து என்பதல்ல. கொள்ளத்தகாத உயர்ந்த அந்தஸ்து இருப்பதாக எப்பொழுது உரிமை பாராட்டப்படுகிறதோ அந்த நிமிஷமே, அது காலின்கீழ்ப் போட்டு மிதிக்கத் தகுந்ததாகிறது.

கேள்வி:— திருவள்ளுவர் உங்களுக்குத் தெரியும். பிறப்பால் ஜாதியில்லையென்று, அந்தப் புராதன நூலின் ஆசிரியர் கூறுவது உங்களுக்குத் தெரியுமா? "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று அவர் கூறுகிறார்.

பதில்:— தற்காலத்தில் மிகைப்படுத்தப் பெற்றுக் கூறப்படுமவற்றுக்கு ஓர் பதிலாக, அதை அவர் கூறுகிறார். எந்த வர்ணத்தினரேனும் தாங்கள் உயர்ந்தவர் என்று உரிமை பாராட்டினால், அதை அவர் எதிர்த்துரைக்க வேண்டியதாயிற்று. ஆனால், அது வர்ணத்தின் வேரை வெட்டிவிடவில்லை. சமத்துவம் இல்லாமையின் வேரை வெட்டிவிடுவதே ஆசாரச் சீர்திருத்தக் காரனின் முயற்சியாகும்.

கேள்வி:— தற்காலத்திய வழக்கம் முற்றும் உருக்குலைந்ததாக விருக்கிறது. அதனால், அதை முற்றிலும் கைவிட்டுவிட்டு, மறுபடியும் முதலிலிருந்தே துவங்குவது சிறந்ததல்லவா?

பதில்:— நாம் சிருஷ்டிகர்த்தர்களாக இருந்தால் மாத்திரமே அவ்வாறு செய்யலாம். பேனாவின் கீற்று ஒன்றால், இந்த இயற்கையை நாம் மாற்றிவிட முடியாது. (இந்த) தர்மத்தை நடத்தக் கூடியதோர் வழியை நாம் கண்டுபிடிக்க வேண்டும்; அதை அழிக்கக் கூடியதோர் வழியையன்று.

(தொடரும்)

வாரக்கடிதம்.

மகாதேவதேசாய் அவர்கள் "இளமை இந்தியர்"வின் க-கஉ-ககஉஎ-ல் இதழில் எழுதியுள்ள வாரக்கடிதத்தின் சாரமான பகுதிகள் வருமாறு:—

மந்திரசக்தி கொண்டதீவு-

கொழும்பில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்தவுடனே, எனது சென்ற கடிதத்தை நான் அங்கிருந்து எழுதினேன். கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து போகும் வியாபாரக்கப்பல்களின் மொத்த நிறை இரண்டு கோடி டன்களாகும். (ஒரு டன்னுக்கு உஉ௱௪௰ இராத்தல்கள்.) துறைமுகத்திற்குள் வந்து செல்லத்தக்க கப்பல்களின் மொத்த டன்கள் நிறைவிஷயத்தில் உலகத்திலேயே கொழும்புத்துறைமுகம் ஆறுவதாக நிற்கிறது. நகரத்தின் சில பகுதிகள் மைலாப்பூரையும் சௌரிங்கியையும் ஞாபக மூட்டுகின்றன. அப்பொழுது (அதாவது முந்திய கடிதத்தை எழுதியபொழுது), இவ்வழகிய துறைமுகத்தையும், நகரத்தின் இச்சில பகுதிகளையும் தவிர, மேலொன்றையும் நான் பார்க்கவில்லை. ஒரு விதமான மந்தத்தன்மையும் சுவையின்மையையும் கொண்ட ஒரேமாதிரியான ஈனமான கட்டிடத்திரள்களையும், மேற்பகட்டானதொரு நாகரிகத்தையும் தவிர, தற்காலத்திய நகரங்களிலே, வேறு என்னத்தைப் பார்க்கலாமென்று ஒருவர் எதிர்பார்க்க முடியும்? "எங்கும் ஒரேமாதிரியாய்ச் செய்துவிடும்' மேனாட்டு நாகரிகத்தின் சக்தி, கொழும்பில் வேறிடங்களைவிட, அநேகமாக, அதிக மும்முரமாகவே இருக்கிறது. தற்காலத்திய பிற எந்தநகரத்தையும போலவே இதவும் இருக்கிறது. ஆனாலும், உட்பிரதேசத்தில்—இலங்கை வாசிகள் இதனை உள்நாடு என்கிறார்கள்—செல்லும் பொழுது, இலங்கையின் சுகந்தமான இளங்காற்றின் வாசனையை அனுபவிக்கத் துவங்குகிறோம். நாங்கள் சயிலாவரைக்கும் கடற்கரையோரமாக வடபக்கம் நோக்கி மோட்டாரில் சென்றோம். அங்கிருந்து, குருணாக்கல்லுக்குச் சமீபத்தில் உள்ள மலைஜில்லாக்களுக்குள் நுழைந்து, கண்டி போய்ச்சேர்ந்தோம். இடைவழியில், அநேக இடங்களைப் பார்த்துவந்தோம். இவ்வழகிய நகரம் (கண்டி) சுற்றிலும் குன்றுகளால் சூழப்பட்டிருக்கிறது. வனப்புவாய்ந்ததோர் சாலையின் மூலமாக, இதற்குப்போய்ச் சேரவேண்டும். ரப்பர்மரங்களும், லவங்கமரங்களும் நிறைந்த வனங்களினூடே, இச்சாலை செல்லுகிறது. இதன் இருமருங்கிலும் தேயிலை, காப்பி, கோக்கோமுதலிய தோட்டங்கள் இருக்கின்றன. என்றாலும், உங்களைச் சுற்றிலுமுள்ள காட்சியைக் கண்டு நீங்கள் களிப்பால் பரவசமடையத்துவங்கும் பொழுது, (இவற்றைப்பெற்ற) பெருமைகொண்ட கண்டிவாசி இன்னும் நீங்கள் ஒன்றையும் பார்த்து விடவில்லையென்று உங்களிடம் கூறுகிறார். வதுளையின் மத்திய ஜில்லாவுக்கும், வதுளையிலிருந்து நாரளைக்கும், அங்கிருந்து அட்டனுக்கும் பிறதோட்டங்களுக்கும் சென்று, திரும்பவும் கண்டிக்குவந்து, மறுபடியும் கண்டியிலிருந்து கொழும்புக்குச் சென்ற பொழுது, கண்டிவாசி கூறியதன் உண்மை எனக்குவிளங்கியது. உலகத்தின், இயற்கையிலேற்பட்டுள்ளஇச்சிங்காரவனத்தின்மனோரம்மியமான, மனதைக் கவரும் காட்சியைப் பற்றி, ஐரோப்பியப் பிரயாணிகள் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்கள். ஒரு காட்சியினின்றும் மற்றொரு காட்சிக்கு ஒருவர் செல்லும்பொழுது, அவர் கண்முன்னே தோன்றும் பல்வகையழகு கொண்ட காட்சியை, அவர்கள் வருணித்தெழுத முயன்றிருக்கிறார்கள். அவரிற்சிலர், நாரளையின் கண்ணைக்கவரும் அழகை, ஸ்னௌடன் என்னுமிடத்தின் அழகுடன் ஒப்பிட்டு, அதோடு திருப்தியடைந்து விட்டார்கள். (ஸ்னௌடன் என்பது இங்கிலாந்து நாட்டின் வேல்ஸில் உள்ளது.) ஸ்விஸர்லின் பள்ளத்தாக்குகளைவிட, வதுளையின் சுற்றுப் புறம் அதிகவசீகரமாக இருக்கின்றதென, அவர்களில் வேறுசிலர் கூறியுள்ளார்கள். முழுக்காட்சியும், "தன்னைமறவா நிலையில் தோன்றும் உண்மைபோல அல்லாமல், மந்திரத்தால் தோன்றியதோ, கனவில்காணும் தேவலோகமோ என்னுமாறே" இருக்கிறது என்று வேறொருவர் கூறுகிறார். "அந்தப் புனிதமான சோலையிலே, பர்வ அறிக்கை செய்ய ஏற்ற இடமாக இல்லாத ஒருமூடுக்கும் இல்லை" என்று வேட்ஸ்வொர்த் (என்னும் ஆங்கிலக்கவி) கூறிய இடமாக, காந்தியடிகளுக்கு அது இருந்தது. மனிதன் முன்னே இயற்கைத்தாய் எழுப்பியுள்ள மகத்தான இக்கோயில் கண்டு திருப்திகொள்ளாமல், தான்கோயில் என்றுகூறும் சாந்துச் சுண்ணும்புக் கட்டடத்தில் கடவுளைக்காண, மனிதன் ஏன் தேடித்திரிகிறான் என்று காந்திஜீ அதிசயித்தார்! வதுளையில் அவர் நிகழ்த்திய நீண்ட பிரசங்கத்தை முடிக்கையில், குடியெனும் சாபத்தைக்குறித்துப் பேசுங்காலையில், இவ்வாறு கூறினார்:—"கண்டியிருந்து இவ்விடத்திற்கு நான் இன்று தினம் வரும் பொழுது, மிகநேர்த்தியான சில காட்சிகளின் வழியாக வந்தேன். எனது வாழ்க்கையில் நான்பார்த்துள்ள காட்சிகளுளெல்லாம் மிகநேர்த்தியானவை அவை. இயற்கையன்னை இவ்வளவு தாராளமாக, இத்தகைய களங்கமற்ற, மாண்புறச் செய்யும் பரவசக் காட்சியைத் தந்திருக்குமிடத்தில், திடமுறச்செய்யும்காற்றை உட்கொள்ளத் தந்திருக்குமிடத்தில், வெள்ளிப் பளபளப்பு கொண்ட, ஆனால்உயிருக்கே ஆபத்தான, மதுவைப் பருகிப் பரவசம் பெற,ஒரு மனிதன் அல்லது பெண் தேடுவது அநியாயமாகும்."

ஜனங்களைப் பற்றிச்சில.

ஆனால், அது என்னை மந்திரசக்தி கொண்ட இத்தீவின் ஜனங்களைப் பற்றிக் கூற இட்டுச் செல்கிறது. இதன் ஜனத்தொகை சரு-லட்சம். அதில் சிங்களர்கள் உக-லட்சம்; தமிழர் பத்து லட்சம். இதில் ரு-லட்சம் பேருக்கு மேல், தேயிலைத் தோட்டங்களிலும், ரப்பர்த் தோட்டங்களிலும் இன்னும் பிறதோட்டங்களிலும் தொழிலாளர்களாக வேலை செய்து வருபவர்கள். ஆதலால், சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் இசை கொண்ட ஒற்றுமை வேண்டுமென்ற பிரச்சினை மட்டிலுமன்று, தோட்டங்களில் தொழிலாளர்களது நிலைமைகள்குறித்த பிரச்சினையும் இலங்கைக்கு இருக்கிறது.

ஜனத்தொகையிற் பெரும்பகுதியினர் விவசாயிகள். நெல்லும், தென்னையும் பயிரிடுவதால் அவர்கள் ஜீவனம் செய்கிறார்கள். விவசாயம் செய்யப்படும் மொத்த விஸ்தீர்ணம் ச௦-லட்சம் ஏக்கராக்களாகும். அதில், பத்துலட்சம் ஏக்கர் தென்னையாகும். தேயிலைத் தொழில், பிரம்மாண்டமான அளவு வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், பதினேழு கோடி இராத்தல் தேயிலை ஏற்றுமதியாகின்றது. அது முக்கியமாய் ஐரோப்பியத் தோட்டக்காரர் கைகளிலேயே இருக்கின்றது. ரப்பர் பயிரிடப்படும் விஸ்தீரணம் கக௦ச-ம் ஆண்டைப்போலப் பதினான்கு மடங்காக அதிகரித்திருக்கிறது. இது மற்றொரு முக்கியமான தொழிலாகும். உலகத்தின் ரப்பர் விளைவு மொத்தத்தில், நூற்றுக்குப் பனிரண்டரை இலங்கையின் விளைவாகும். அதவும், பெரிதும் ஐரோப்பியத் தோட்டக்காரருக்கே சொந்தமாயிருக்கிறது. உலோகப்பொருள்களில், காரீயத்தொழில் கணிசமானதாகும். சிங்கள ஆண், பெண்களில் ஒரு லட்சம் பேருக்கு, அது வேலையளிக்கிறது. இத்தீவிலுள்ள தொழிலாளரில்—தோட்டங்களிலும் சரி, சமவெளிகளிலும் சரி, சாலைகளிலும் சரி—பெரும்பகுதியினர், இந்தியாவின் தமிழ் நாட்டினின்றும் இழுக்கப்பட்டவர்களே. தமிழ் நாட்டின் சிலபகுதிகள் பல ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பஞ்சங்களுக்கு உள்ளாயிருக்கின்றன. அங்கே செலவுக்கேற்ற வருவாய்கிடைக்காததனால், அவர்கள் இலங்கைக்கு வந்து குடியேறியிருக்கிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை. எனினும், சிங்களர்களைவிட, தமிழர், அவசியத்தினாலே, அதிக உழைப்பாளிகளாகவும் இருக்கிறார்கள். எனவே, தோட்டக்காரிபந்தர்கள் (மானேஜர்கள்) அவர்களையே அதிகமாய்விரும்புவது வழக்கமாயிருக்கிறது. வேலையில் சிங்களர்களுக்கு இஷ்டமில்லாதிருப்பது, இயற்கையளித்துள்ளவோர் குணமாகும். சிறைப்படுத்தப்பெற்ற ஆங்கிலேயரான நாக்ஸ் என்பவர் கூட, கசுஅ௦-ம் ஆண்டில், சிங்களர் 'கஷ்டப்பட்டு உழைப்பவரல்லர்,' "தங்கள் சொந்த உபயோகத்துக்கான, கல்லகெட்டியான துணியைச் செய்துகொள்ளப் போதிய பஞ்சு' தங்கள் சொந்த நிலங்களில் நிறையப் பயிராயினும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளச் சக்தியற்றவர் என்று கூறினார்.

குருடா, செவிடா?



தர்மவான்:—நீ குருடனா?

பிச்சைக்காரன்:—ஆம், பிரபு!

தர்மவான்:—நீ செவிடோ?

பிச்சைக்காரன்:—ஆமாம், பிரபு!

தர்மவான்:—ஏனப்பா?— நீதான் பார்க்கவும் கேட்கவும் சக்தியுடையவனாயிருக்கிறாயே?

பிச்சைக்காரன்:—இல்லை, எஜமானே! கணிசமான ஒருகாசைப் பார்த்து, உண்மையான தர்மகுணங் கொண்ட அன்பார்ந்த ஒரு வார்த்தையைக் கேட்டு, எத்தனையோ யுகங்களாகிவிட்டன, பிரபு! இந்தக்காலத்தில் அற்பமான 'தம்படி'களைத்தான் பார்க்கிறேன்; அரம் போன்ற சொற்களையே கேட்கிறேன்.

பௌத்தமதத்தினர் இந்துமதத்தின் ஜாதி ஏற்பாட்டை மட்டுமன்று, தீண்டாமையைக் கூட இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரபு புத்தரின் முதற் கட்டளைக்கு விரோதமாக, அவர்கள் மாமிசம்,இறைச்சியும்கூட, அருந்துகிறார்கள்; ஐந்தாம் கட்டளைக்கு விரோதமாக,'நாகரிகமடைந்தவர்கள் மதுபானம் செய்தலை மதிப்பாகக் கருதுகிறார்கள்; கடைசிக்கட்டளைக்குவிரோதமாக, தாங்கள் உண்மையாகவே புத்தரின் பற்கள் என்று நம்பிக்கை கொண்டவற்றைநேர்த்தியான தங்கப்பெட்டிகளுக்குள்—அவற்றின் இரண்டில் மாணிக்கங்கள் பதிக்கப் பெற்றிருக்கின்றன—வைத்துக் கோவில் கட்டிவைத்திருக்கிறார்கள்! கொஞ்சகாலத்துக்குமுன்,தாம் எழுதிய கட்டுரை ஒன்றில், அனகாரிய தர்மபாலர் என்பவர்,தமது மதத்தினர் உற்றிருக்கும் கதியைப்பற்றி, இவ்வாறு வருந்துகிறார்:—"காட்டின் மலர் போல் உதிர்ந்துவரும் சிங்கள இளைஞர் பரம்பரை, கிருஸ்தவப் பிரசாரகர்களின் செல்வாக்குக்கு உட்பட்டிருக்கிறது. பெருமை வாய்ந்த பூர்வீகச் சிங்களர்கள் வெறுத்தொதுக்கிய பழக்கங்கள், இன்று, பிறநியர்களது சமுதாய ஒழுக்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டு, சகித்துக் கொள்ளப் பெற்று வருகின்றன. சிங்கள மன்னர்கள் காலத்தில், மதுவெதுவும் விற்கப்படவில்லை, விலங்குகள் கொல்லப்படவில்லை. 'கேவலமாக மேனாட்டினரைப் போல் நடிப்போர்,' 'வேறு எந்த நாட்டு ஜனங்களையும்விட அதிகமாகச் சுதேசத்தன்மையை இழந்தவர்கள்,' 'தங்கள் சொந்த நாட்டிலேயே அந்நியர்களாயிருப்போர்' என்பன, ஆங்கிலக் கல்வி கற்ற ஆடவரும் பெண்டிருமாகிய தற்கால ஜனங்களுக்கு, இலங்கை நூலாசிரியர் தாங்களாகவே கொடுத்துள்ள அடைமொழிகளிற் சிலவாகும்.

அரசாங்கம் சென்ற பத்தாண்டுகளில் தனது வரிகளை இருமடங்காக்கிவிட்டது. என்றாலும், ஆக்.. ம் என்ற [illegible] களின் மூலமாயும், [illegible] யே பத்து லட்சம் ரூபாய் [illegible] அது அடைந்துவிடுகிறது [illegible] லையோ உ௨ கோடியே [illegible] இந்த அரசாங்கத்தைப்பற்றி என்ன [illegible] அவது! [illegible] இந்தியாவுக்கும் [illegible] மனச்சாட்சியுடைய ஒரு [illegible] கஅஎஉ-ம் ஆண்டிலேயே, [illegible] சரிக்கைக்குறிப்பை [illegible] செவி கொடுக்கப்படவில்லை. [illegible] நாவது:—"ஆங்கில அரசாட்சி [illegible] க்கு அநேக நன்மைகளை அளி[illegible] இலங்கை வாசிகள் அதை [illegible] எப்பொழுதும் தயாராயிருக்கிறோம். [illegible] னும், அதே சமயத்தில், நாம் [illegible] யையும் நாடு முழுவதும் பரப்பி[illegible] அது ஜன்மக்கோவில் மற்றொரு [illegible] மிகக் கனமாக நிற்கிறது. [illegible] பானமாகும். [illegible] முன்னர், [illegible] பொருளை [illegible] அமைதிப்பார்கள். இப்பொழுது, [illegible] மிகச் சாதாரணமாய்ப் போய்விட்ட[illegible] வின், அந்த அமைப்பு மறைந்து விட்டது. இந்த விஷயத்தைக் குறித்[illegible] விசேஷமான சில மனுக்களை [illegible] பெற்றிருக்கிறேன். அவை [illegible] வது:—'விற்பனை இடங்களுக்கு [illegible] கட்டிவிடுங்கள். [illegible] கள் செய்யுங்கள்; [illegible] பெருத்த ஒழுக்கவீனங்களும், [illegible] திற்கு உண்டாகும் பெருத்த [illegible] குறையும்; இந்தச் [illegible] பூர்வமாக உடன்படுகிறோம் [illegible] பானங்களின் விற்பனைக்கு [illegible] வதால், சிறிது வருமானம் குறையும்; [illegible] றாலும், மனுதாரர்கள் [illegible] சமூகத்தின் பொதுவான [illegible] விருத்தியடையும்; குற்றங்களை [illegible] ஏற்படுத்தப்பெற்றிருக்கும் [illegible] செலவு குறையும்; [illegible] இவற்றால் ஈடுசெய்யப்பெறும்." [illegible] கடமையை மதித்த ஒரு [illegible] பெற்ற ஞான வார்த்தைகளும் [illegible] மனச்சாட்சியுள்ளதோடு [illegible] ஓர் அரசாங்கம், இவற்றைக் குறித்து [illegible] கவனமையாய்ச் சிந்திக்க வேண்டும்.

'முதுகெலும்பு' ([illegible])

ஆனால், கிடைத்த உதவியைக் குறித்து நான் கூறவேண்டும். மற்றெல்லாவற்றையும்விட இதை நான் மிக அதிக உயர்வாக மதிக்கிறேன். எளிய தொழிலாளருக்குச் [illegible] இன்றும் அதிகமானதைக் காந்தியடிகள் அளிக்கமுடியவில்லை என்ற வருத்த உணர்ச்சி, இதனால், மனதில் உண்டாகிறது. கொழும்பில் நிகழ்ந்த பிரம்மாண்டமான கூட்டத்தைக் குறித்து, எனது முந்திய கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ளேன். வதுளை, நாவல, அட்டன் ஆகியவற்றின் தேயிலைத் தோட்டங்களில் அத்தகைய இன்னும் அநேக கூட்டங்களை, இவ்வாரத்தில் நாங்கள் கண்டோம். என்ன விசுவாசம்! எளிமையும், என்ன அபிமானம்!! தங்களுக்கு முன்னே அமைந்த கடல்போலக் குவிந்துள்ள மனிதர்களது சிரங்களுக்குமேலே, காந்தியடிகளை ஒருதடவை பார்க்க கஷ்டத்துடன் முயன்று கொண்டிருந்த சில [illegible] தொழிலாளர்களை நான் சந்தித்தேன்.

"நீங்கள் இங்கே எந்தகாலம் வந்திருக்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

கேள்வியின் மூலமாக சந்தோஷமடைந்த ஒரு பெண்மணி, பதில் கேள்வி யொன்றால், விடையளித்தாள். அவள் கூறியதாவது:—நீங்கள் எந்தகாலம் வந்திருக்கிறீர்கள்?"

வேறொருவர், இடையே, இச்சம்பாஷணையைப் பிடித்துக் கொண்டு, "உங்களுக்குத் தெரியாதா? நாங்கள் எங்கள் [illegible] காலமுதற்கொண்டு வந்திருக்கிறோம்" என்கிறார்.

"உங்கள் கடவுள்! அவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று நான் கேட்டேன்.

"தெரியும்; காந்திதான்"

(அடுத்த பக்கம் பார்க்க).

வாரக்கடிதம்.

"பணமுடிப்புக்கு நீங்கள் ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா ?"

"கன்ருய்! ஒருநாள்சம்பளத்தைக்கொடுத்திருக்கிறேன், அது சடு-சதங்களாகும்."

"உங்கள் பணத்தை அவர் என்ன செய்யப் போகிருர் என்று உங்களுக்குத் தெரியுமா ?"

"தெரியாது. ஆனல், ஏதாவது நல்ல விஷயத்தையே அவர் மனத்தில் வைத்துக் கொண்டிருப்பார்."

கதர்ப்பணம் எதற்காகத் திரட்டப்படுகிறது என்பதை நாங்கள் அவருக்கு விளக்கினேம்.

நான் சொன்னதாவது:—"ஜனங்களாகிய உங்களுக்கு அவர் சொல்லும் புத்திமதி என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தொழிலின் மேன்மையை நீங்கள்உணர்ந்து கொள்ளுங்கள்; தூய, நேர்மையான வாழ்க்கையைக்கடைப்பிடியுங்கள்; அசுத்தமும்,ஒழுக்கங்கெட்டதுமான வாழ்க்கையைக் கைக்கொள்ளும்படி உங்களை நிர்ப்பந்திக்கத்தக்க விபத்துகளை ஏற்க நீங்கள் மறுத்துவிடுங்கள். இவ்வாறு அவர் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிருர். எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களுக்கு அவர் கூறுவது யாதெனில், குடிக்கும் வழக்கம், பாம்புக்கடியினும் கெடுதலானது என்பதாகும். பாம்புக்கடி உடம்பைக் கொல்லுகிறது ; குடிக்கும் வழக்கமோ, ஆன்மாவுக்கே கஞ்சிட்டுக்கெடுத்து விடுகிறது. சீறும் பாம்பினின்றும் போல, இத்தீமையினின்றும் ஓடிவிடுமாறு, இதனுற்ருன் அவர் உங்களுக்குக் கூறுகிருர்."

ஆனல், அவர்கள் இதைக்கவனிக்கவில்லை. அவர்களது கவனத்தைஅநாவசியமாக, நாங்கள் இழுத்துவிட்டோம். காந்திராஜாவைப் பார்ப்பதற்காக, அவர்கள் வந்திருந்தார்கள்! நாங்கள் அவர்களை விட்டுச் சென்றபொழுது, குடிமயக்கத்தால் தட்டித்தடுமாறிக் கொண்டிருந்த சிலரைக்கண்டோம்; அவர்களில் ஒருவன் பெருத்த களிப்புடன் கூத்தாடிக் கொண்டு, "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று உச்சரித்துக் கொண்டிருந்தான்.

இது அட்டன் தோட்டத்தில்நிகழ்ந்தது. என்றாலும், எங்கும் இவ்வாறேயென்று வாசகர் நினைத்தோடிவிடலாகாது. வதுளையில் அதிசயிக்கத்தக்கதோர் அமைதியான கூட்டம் நடந்தது. காந்திஜீ முக்கால்மணி நேரத்துக்குமேல் பிரசங்கம் செய்தார்.

இந்த எளிய ஜனங்களுக்குத் நாம் இன்னும் அதிகநேரத்தை அளித்து, அவர்களது வீடுகளில் அவர்களைக் கண்டு—ஏதேன் தோட்டம் (சுவர்க்கலோகம்) போன்ற நாசிலையிலுங்கூட, அவர்கள் வீடுகள் அசுத்தமாய் இருக்கின்றன—,அவர்களது துக்கங்களைப் பங்கிட்டுக்கொண்டு 'பருகி', இந்தச் சுகமான ஸ்தலங்களிலுங்கூட அவர்களிடம் மிகச் சாதாரணமாயிருந்துவரும் புழுக்கடிபோன்ற நோய்கள் வாராது தடுத்துக் கொள்வதெப்படி என்று காட்டித்தர முடியவில்லையே யென்று எண்ணி, காந்தியடிகள், பிறர் எவரையும்விட அதிகமாக வருந்தினர். தோட்ட முதலாளிகளையும், கங்காணிகளையும் சந்தித்து, தொழிலாளரின் நிலைமையில் அபிவிருத்திக்கான திட்டங்களை வாதிப்பதில் அவருக்கு ஆசை. ஆனல், அது முடியவில்லை. தூய்மையாயிருங்கள், தன்னடக்கங் கொண்டிருங்கள் என்ற செய்தியை மட்டிலுமே அவர்களுக்கு அவர் விடுக்கமுடிந்தது. இத்தீவின் முதுகெலும்பு போன்ற தொழிலாளர் தன்புற்று நாசமுற இனி அவர்கள் விடாதிருப்பதற்காக, இந்தச் செய்தி அவர்களுக்கும் அவர்களது முதலாளிகளுக்கும் எட்டும் என்று நம்பிக்கை கொண்டு, கடவுளுக்குப் பிரார்த்தனை செய்யத்தான் முடிந்தது. தொழிலாளர், அவர்களுக்கும் (அதாவது முதலாளிகளுக்கும்) முதுகெலும்பாவர்; முதுகெலும்பு நிமிர்ந்து, வலிமையாக இருக்கும் வரையில்தான், அவர்களும் நிமிர்ந்து, வலிவுடன் இருப்பார்கள்.

மதிப்புரை.

எனது குருநாதர்.

(மொழி பெயர்ப்பாசிரியர்:—ஆர். நாராயணசாமி அய்யர். விலை அணா அ. வெளியிட்டோர்:—ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலையார், பார்க் டவுன் சென்னை.)

சுவாமி விவேகானந்தரைக் குறித்தும், ராமகிருஷ்ண பரமஹ்ஸரைக் குறிததும் அறிமுகம் செய்விக்கப்பட வேண்டியவரில்லை. ராமகிருஷ்ண பரமஹ்ஸரது ஆன்ம வளர்ச்சி பற்றி, பல முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து அழகுபட, சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் செய்ததோர் சொற்பொழிவின் மொழி பெயர்ப்பாகும் இச் சிறு நூல். மொழி பெயர்ப்புக் கூடியவரை நன்றாயிருக்கிறது. சுவாமி விவேகானந்தரின் தெளிந்த நோக்கத்தைக் காட்டுவதற்காக, இந்நூலினின்றும் கீழ்வரும் பகுதியை எடுத்துத் தருகிறோம்:—

“நீ உண்மையில் சீர்திருத்தம் செய்ய வல்லவனாக ஆகவேண்டுமானால், உன்னிடம் அவசியமிருக்கவேண்டிய அம்சங்கள் மூன்று உண்டு. முதன் முதலாக அனுதாபம் வேண்டியது. உண்மையாகவே உன்னுடைய சகோதரர்களிடம் அனுதாபம் உனக்குண்டா? உலகத்தில் இவ்வளவு துக்கங்களும் அறிவீனமும் மூடபக்தியும் இருக்கிறதென்று உண்மையாகவே உணருகிறாயா? மனிதர்கள் உன் சகோதரர்கள் என்ற உண்மையான அறிவு உனக்கிருக்கிறதா? இவ்வித அபிப்பிராயம் உன் சரீர முழுமையும் குடிகொள்ளுகிறதா? உன் இரத்தத்தோடு கூட இந்த உணர்ச்சியும் ஓடிக்கொண்டிருக்கிறதா? உன் நாடிகளோடு கூட இதுவும் சேர்ந்து துடிக்கிறதா? உன் சரீரத்திலுள்ள ஒவ்வொரு நரம்பிலும் ஒவ்வொருபாகத்திலும் இந்த அனுதாபம் பரவிக் கொண்டேயிருக்கிறதா? அனுதாபமே நிறைந்த பிண்டமாக நீ இருக்கிறாயா? இப்படியிருந்தால் இது முதற்படியேயாகும். பிறகு விருத்தியடையும்படியான மார்க்கம் ஏதேனும் கண்டுபிடித்தாயா என்று கவனிக்கவேண்டும். பழைய கொள்கைகளெல்லாம் மூடபக்தியாகவே இருக்கலாம்; ஆனால், இந்த மூடபக்தித் தொகுதிகளைச் சுற்றி உள்ளும் புறமும் பொன்மயமான உண்மைப் பொருள்கள் பரந்து கிடக்கின்றன. கெடுதல்களையெல்லாம் நிவர்த்திசெய்து இந்த உண்மைப் பொருள்களை மாத்திரம் காப்பாற்றும்படியான மார்க்கத்தை நீ கண்டு பிடித்தாயா? இப்படிப்பட்ட மார்க்கத்தைக் கண்டுபிடித்தால் அது இரண்டாவது படியே தான்- இன்னமொரு விஷயம் கவனிக்க வேண்டியிருக்கிறது. உன்னுடைய எண்ணம் எவ்விதமிருக்கிறது? பொருளுக்காக ஆசைப்படாமலும், பெருமைக்காகவும் அதிகாரத்திற்காகவும் நீ தாபமடையாமலுமிருப்பது நிச்சயந் தானா? உலகமுழுமையும் கிளம்பி உன்னை அமுக்க வேண்டுமென்று விரும்பினாலும் உன்னுடைய கொள்கைகளின்படி நீ உறுதியாய் நின்று வேலைசெய்ய முடியுமென்று நிச்சயமாய் நினைக்கிறாயா? உன்னுடைய தேவை இன்னதென்று நிச்சயமாய்த் தெரியுமா? உன் கடமையைச்செய்து முடிப்பாயா? உன்னுயிரே போய் விடக் கூடிய நிலையிலிருக்கும்போது கூட, தனியே நின்று செய்து முடிப்பாயா? உயிரிருந்து தாக்கும் வரையில், ஹிருதயத்தில் சொற்பமாவது படபடப்பு உள்ளவரையிலும் விடாப்பிடியாய் வேலைசெய்ய முடியுமென்று நிச்சயமாய் நம்புகிறாயா? இப்படியெல்லாம் இருக்க முடிந்தால், நீ உண்மையில் சீர்திருத்தஞ் செய்ய வல்லவன் தான்; நீ ஒரு உபாத்தியாயரே, ஆசாரியனே. மனித வர்க்கத்தையே நீ இரட்சிக்கத் தகுந்தவன்.”

செய்திகள்.

சென்ற ஆண்டு நோபில் ‘சமாதானப் பரிசை’ பிரஞ்சு புரொபஸர் பெர்டினண்டு பிஸ்ஸான் அவர்களும், ஜெர்மன் புரொபஸர் லட்விக்கு விட்டி என்பவரும் பங்கிட்டுக் கொள்வார்களாம்.

* * *

பர்மா ரயில்வேக் கம்பெனிக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள ஒப்பந்தம் டிசம்பர் ௴ ௩௧-௨ யோடு முடிவடைகிறது. ஜனவரி ௴ முதல், அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதென்று, இந்தியா மந்திரி ஒப்புக் கொண்டாராம்.

* * *

பல்கேரியாவில் உள்ள ஸோபியா என்ற நகரத்தில் சமீபத்தில் ஒருநாள் இரவு ஒரு ஆள் குடித்துவிட்டுக் குடி மயக்கத்தில், ரிவால்வரால் மேலே சுட்டபொழுது, அது மின்சாரக் கம்பியை அறுத்து விட்டதாம். அதனால், நகர் முழுவதும் விளக்குகளெல்லாம் அணைந்து ஒரே இருட்டாய்ப் போய் விட்டதாம்.

* * *

குஜராத் வெள்ளக்கஷ்ட நிவாரணநிதிக்காக’ திரு. படேல் துவக்கிய நிதிக்கு இறக்குறைய ஒரு லட்சத்துப் பன்னீராயிரம் ரூபாய் வசூலாயிருக்கிறதாம். இதில் ௫௦௦ ரூபாயையும் பர்மாவினின்றும் ஒரிஸாக் கஷ்டநிவாரணத்திற் கென்று வந்த ௫௦௦ ரூபாயையும் ஒரிஸாக் கஷ்டநிவாரணத்திற்கு திரு. படேல் அளிப்பார் என்று தெரிகிறது.

* * *

௧௯௨௧-௨௭-ம் ஆண்டில், இந்தியாவில் வந்து இறக்குமதியான நூலில், நூற்றுக்கு ௭௪ பங்கு பிரிட்டனிலிருந்தும், நூற்றுக்கு ௱௪ பங்கு ஜப்பானிலிருந்தும் வந்ததாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே நூற்கப் பெற்ற நூலின் மொத்த நிறை, அ௦ கோடியே எழுபது லட்சம் இராத்தல்களாகும். முந்திய ஐந்து ஆண்டுகளின் சராசரி மொத்த நிறை ஆண்டு ஒன்றுக்கு, ௬அ கோடியே நாற்பது லட்சம் இராத்தல்களாகும்.

* * *

திரு, ஆர்தர்பான்ஸான்பி என்பவர், ௧,௨அ,௭௭௦ பிரிட்டிஷ் ஜனங்கள் கையெழுத்திட்ட ஒரு அறிக்கையை திரு. பால்டுவினிடம் டிசம்பர் ௴ அ-௨ அளித்தாராம். எந்த நாடுகளுக்கு மிடையே இருக்கக் கூடிய சச்சரவுகளும் ராஜிசெய்யப்படக் கூடியனவே யென்றும், ராணுவத்தை எந்தக் கட்சி சார்ந்தநாயிருப்பினும் அந்தக் கட்சியின் அரசாங்கத்தைத் தாங்கள் ஆதரிக்கப் போவதில்லை யென்றும், அதற்குப் போர்த்தொண்டு புரியபோவதில்லை யென்றும் அதில் அவர்கள் கூறியிருக்கிறார்களாம்.

* * *

௧௯௨அ-ம் ஆண்டுக்கு அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பெற்று, வெளியாயிருக்கிறது. இராணுவச் செலவுக்கு ௬௬-கோடியே ௫௦-லட்சம் டாலர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற வரவு செலவுத் திட்டத்தில் உள்ளதைவிட இது ௨ கோடிடாலர்கள் அதிகமாகுமாம். புதிதாக இரண்டு நீர் மூழ்கிக் கப்பல்களும், எட்டுக் குரூய்ஸர் கப்பல்களும் ௧௯௨அ-ம் ஆண்டுக்குக் கட்டப்பட்டு வருகின்றனவாம்.

* * *

வயது முதிர்ச்சியைக் காட்டும் மாறுதல்கள் எதனையும் அடையாத உறுப்பு மூக்கு ஒன்றுதான். இதற்கு அடுத்தபடியாக, காதைக் கூறலாம். காது வயது முதிர்ச்சியைக் காட்டக்கூடிய மிகச் சில மாறுதல்களையே அடையும் என்று சொல்லப்படுகிறது.

காங்கிரஸ்.

சென்னைக் காங்கிரஸ் கூடுவதற்கு இம்மாதம் (டிசம்பர்௴) ௨௬, ௨௭, ௨அ௨கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இது இந்தியத் தேசியக் காங்கிரஸின் ௪௨-வது மகாநாடாகும். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டங்கள் ௨௪, ௨௫௨களில் நடைபெறும். விஸிடர்களுக்கு ௨௦, ௧௫, ௧௦ ரூபாய்கள் விகிதம் டிக்கட்கள் கொடுக்கப்படும். மேலும், டிக்கட் ஒன்றுக்கு ரூ௧-வீதம் அட்மிஷன் கட்டணம் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. பெண்களின் கட்டணங்கள் குறைக்கப் பட்டிருக்கின்றன. மேடைமீதுள்ள பீடங்களுக்கு ரூ. ௧௦ என்றும், தரைக்கு ரூ. ௫ என்றும் இப்பொழுது நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. இரண்டிலும் பிரத்தியேகமாக ஸ்திரீகளுக்கு இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். எட்டவுள்ளவர்களுக்கும் கேட்கும்படிச் செய்வதற்கான ‘லௌடு ஸ்பீக்கர்ஸ்’ என்ற மின்சாரக் கருவிகள் வைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

ரயில்வே வசதி.

ரயில்வே கம்பெனியாருக்கும் வரவேற்புக் கமிட்டியாருக்கும், ரயில்வே வசதிகளுக்கான பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. எனினும் பின்வரும் வசதிகள் நிச்சயமாய் ஏற்படும் என்று தெரிகிறது. டிசம்பர் ௨௩௨ யிலும் ௨௪௨ யிலும் மதுரையிலிருந்து ஒரு ஸ்பெஷல் டிரெயின் சென்னைக்கு விடப்படும். ௨௫௨ திருச்சினாப்பள்ளியிலிருந்து சென்னைக்கு ஒரு ஸ்பெஷல் டிரெயின்விடப்படும். இந்த ஸ்பெஷல் டிரெயின்களுக்கு மட்டில், முதல், இரண்டு, மூன்று ஆகிய எல்லா வகுப்புக்களுக்கும் போகவரவுள்ள கட்டணத்திற் பாதியை மட்டும் பெற்றுப் போகவர டிக்கட் அனுமதிக்க, ரயில்வே கம்பெனியார் சம்மதிக்கவில்லை என்று தெரிகிறது. இந்த ஸ்பெஷல் வண்டிகள் குறிப்பிட்ட சிலமுக்கிய ஸ்டேஷன்களில் மட்டில்தான் நிற்கும். இவை காலை ௭ மணிக்கும் ௯ மணிக்கும் இடையே சென்னை போய்ச் சேருமாறு கால நிர்ணயம் செய்யப்படும், பிராட்கேஜிலும் இவ்வாறு வசதிகள் செய்யப்படும். சென்னையிலிருந்து திரும்பப் பிரயாணம் செய்வதற்கு, டிசம்பர் ௩௦,௩௧, ஜனவரி ௧௨ களில் ஸ்பெஷல் டிரெயின்கள் சென்னையிலிருந்துவிடப்படும்.

பிரார்த்தனைக் கட்டடங்கள்.

காங்கிரஸ் நகருக்குள், முஸ்லீம் நண்பர்களின் வசதிக்காக, ஒரு மசூதியும், பிரார்த்தனைக் காரியங்களுக்காக, அதன் சமீபத்தில் தீர்த்தக் குளம் ஒன்றும் வரவேற்புக் கமிட்டியால் அமைக்கப்பெறும். இந்துக்களின் வசதிக்காக, திரு. ரங்கநாயகலு செட்டியார் ஓர் பிரார்த்தனை மண்டபம் காங்கிரஸ் நகருக்குள் தமது சொந்தச் செலவில் அமைத்துத்தர இசைந்திருக்கிறார்.

தென்னாப்பிரிக்காப் பிரதிநிதிகள்.

தென்னாப்பிரிக்க இந்தியக் காங்கிரஸின் காரியதரிசி தந்திமூலம், “இப்பொழுது இந்தியாவிலேயே உள்ள சிமதி சரோஜினி நாயுடு, திரு. ஸி. எப். ஆண்ட்ரூஸ், திரு. ரகுநாதஸிங் ஆகியவர் எங்கள் பிரதிநிதிகளாயிருப்பார்கள்” என்று அறிவித்திருக்கிறாராம்.

திரு. போலக் அவர்கள் டிசம்பர்௴ ௨௫௨ பம்பாயில் வந்து இறங்குவார். அவர் சென்னைக் காங்கிரஸுக்கு விஜயம் செய்வார்.

கிரேட் பிரிட்டனிலுள்ள இருப்புப்பாதைகள் யாவற்றையும் சேர்த்தால், அதின் மொத்த நீளம், பூமியின் சுற்றளவைப் போல் இரு மடங்கினதாகுமாம். பூமியின் சுற்றளவு சுமார் ௨௫௦௦௦ மைல்கள் ஆகும்.

குதிரைப்பந்தயம்.

1 2 3 DOODLE

காட்சி. ௧

ராமசாமி (மாதம் ரூ. ௨௦ சம்பளம்.); கோவிந்தன் (மாதம் ௩௫ ரூ. சம்பளம், டெம்பாரி உத்தியோகம்); கிட்டன் (தினச்சம்பளம் அணா ௧௪); வேணு (தையற்காரன், சம்பளம் தெரியவில்லை, நல்ல ஆள்); நாராயணன் (கோபாலன், பெரிய குடும்பம், சிறிய வரும்படி, கடன் உண்டு); அப்பு (வேலையில்லை, நண்பர்கள் உதவி); பாபு (வருமானத்துறை தெரியவில்லை); ஜாக்; ஜிம்மி முதலியோர். பந்தயக்குதிரைகளைக் குறித்தும் ஜாக்கி (சவாரி செய்வோன்) களைக்குறித்தும் உற்சாகமான சம்பாஷணை நடக்கிறது.

காட்சி. ௨.

ஒருவர்பின் ஒருவராக டிக்கட்கள் வாங்குகிறார்கள். ஒரே குதிரையின்மேல் டிக்கட்கள் ஒருவரும் பலருமாகச் சேர்ந்து வாங்கிவிட்டார்கள். கணக்கு வெகுநாள் இராப்பகலாய்ப் போட்டு, முடிவு கட்டிக் கொண்டதாகையால், எதிர்பார்த்துள்ள அதிர்ஷ்டவருமானத்தின் அளவு மிகப் பெரியதாகும்.

காட்சி ௩.

ஆனால், அந்தோ! எதிர்பார்த்த குதிரை ஏமாற்றிவிட்டது. ஜாக்கிக்குத்தான் உடம்பு, சரியாயில்லையோ என்னவோ! இப்படி எதிர்பார்க்கவில்லை! பத்துமடங்காய்விடும் என்று எண்ணிப்போட்ட ஒருமாதச் சம்பளமும் போய்விட்டது! போய்விட்டது!! போய்விட்டது!!! பட்டினி; கண்ணீர்; துன்பம்; குற்றங்கள்; நாசம்! நமது சட்ட அங்கத் தெய்வம் குதிரைப்பந்தயக் கடைகளை உடனே மூடுமா?

நான்காம் பாகம்.

அத்தியாயம் உ௯.

சிறை வாழ்க்கையை முதன் முதலில், நான் அனுபவித்தது, ௧௯௦௮-ம் ஆண்டில். கைதிகள் அனுஷ்டிக்க வேண்டிய சில விதிகள் தன்னடக்கத்தை விரும்பும் பிரம்மசாரியாலும் விருப்புடன் அனுஷ்டிக்கப் படவேண்டுமென்று கண்டேன். உதாரணமாக, மாலையில் சூரியாஸ்தமனத்துக்கு முன் சாப்பாட்டை முடித்துவிடவேண்டும் என்ற விதியாகும். இந்தியக் கைதிகளுக்காவது ஆப்பிரிக்கக் கைதிகளுக்காவது, டீயாவது காப்பியாவது அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் விரும்பினால், சமைத்த ஆகாரத்துக்கு அவர்கள் உப்பைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், நாக்கின் சுவைக்காகமட்டும் அவர்கள் எதையும் எடுத்துக் கொள்ளலாகாது. மசாலைப்பொடி வேண்டுமென்றும் உணவு சமையலாகும்பொழுது அத்துடன் உப்பைச் சேர்த்துக்கொள்ளும்படி அனுமதி தரவேண்டுமெனவும் நான் சிறை டாக்டரைக்கேட்டபொழுது, அவர் கூறியதாவது:—"உங்களுடைய நாவைத் திருப்தி செய்துகொள்ளுவதற்காக, நீங்கள் இங்கே இருக்கவில்லை. சுகாதார சம்பந்தமாக, மசாலைப்பொடி தேவையில்லை. சமையலாகும் பொழுதோ, அதற்குப்பின்னரோ நீங்கள் உப்பைச்சேர்த்துக் கொள்ளுவதால் யாதொரு வேற்றுமையும் உண்டாவதில்லை."

இறுதியில், இந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன. தளர்த்துவதில் கஷ்டம் அனுபவிக்காமலுமில்லை. ஆனால், இரண்டும் தன்னடக்கத்துக்கு ஏற்றவிதிகளாகும். வெளிச் சக்தியினால் வற்புறுத்தப்பெறும் நிபந்தனைகள் அநேகமாக வெற்றி பெறுவதில்லை. ஆனால், அவைகளைத் தானே ஏற்றுக் கொண்டால், அவைகளால் உறுதியாக நற்பயன் ஏற்படுகின்றது. எனவே, சிறையினின்றும் விடுபட்டவுடனே நான் என்னை இந்த இரண்டு விதிகளுக்கும் உள்ளாக்கிக்கொண்டேன். தேயிலைப்பானம் அருந்துவதை, கூடுமானவரையில் நிறுத்திக்கொண்டேன். சூரியாஸ்தமனத்துக்குமுன்னர் உண்ணும் வழக்கத்தையும் அநேகமாக ஏற்படுத்திக்கொண்டேன். இவைகள் இரண்டையும் அனுஷ்டிப்பதில், இப்பொழுது யாதொரு முயற்சியும் எனக்குத் தேவையில்லை.

ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதன்மூலமாக, உப்பை, விடாமல் பத்துவருஷ காலத்துக்கு எடுத்துக்கொள்ளாமல், மறுக்கும்படி நேர்ந்தது. மனிதனுடைய உணவுக்கு உப்புத்தேவையில்லை யென்றும், உப்பில்லாத உணவு சுகத்துக்கு நன்று என்றும் சைவ உணவைப்பற்றிய நூல்கள் சிலவற்றில் நான் படித்திருந்தேன். உப்பில்லாத உணவினால் ஒரு பிரம்மசாரி நன்மை அடைகின்றான் என்று ஊகித்துக்கொண்டேன். பலவீனமான உடலைக்கொண்டவர்கள் பருப்புகளை ஏற்கலாகாது என்று நான் படித்தும் உணர்ந்துமிருந்தேன். பருப்புகளின் பேரில் எனக்குப் பிரியம் அதிகம். சத்திரம் வைத்து, சிறிது காலத்துக்குப் பின்னரும், கஸ்தூரிபாய்க்கு உதிரப்பெருக்கு ஏற்பட்டது. நோய் பிடிவாதமாக இருக்கும் போல் தோன்றிற்று. ஜலவைத்தியம் மட்டும் போதவில்லை. என்னுடைய மருந்துகளில், கஸ்தூரிபாய்க்கு அதிக நம்பிக்கையில்லை. என்றாலும், அவள் அவைகளை எதிர்க்கவில்லை. நிச்சயமாய் அவள் வெளி உதவியையும் வேண்டவில்லை. எனவே, என்னுடைய மருந்துகள் யாவும் பயனற்றுப் போன பின்னர், உப்பையும் பருப்புகளையும் மறுத்துவிட வேண்டுமென்று நான் அவளை வேண்டிக் கொண்டேன். எவ்வளவோ நான் சொல்லுவதற்கு பிரமாணங்காட்டி, அவளுடன் வாதம்செய்த போதிலும் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. உங்களுக்கு எவரேனும் யோசனை கூறினாலும், நீங்கள் அவைகளைவிட்டுவிட மாட்டீர்கள், விட்டுவிட முடியாது என்று என்னைப்பற்றி, அவள் அலட்சியமாகக் கூறினாள். எனக்குக்களிப்பும்துயரமும்சமமாகவந்தன. அவளிடம் எனக்கிருந்த அன்பைக் காண்பிக்க, சமயம் நேர்ந்ததே என்றுகளிப்படைந்தேன். நான் அவளிடம் கூறியதாவது:—"நீ சொல்லுவது தவறு. எனக்கு நோய் கண்டு, வைத்தியர் இவைகளையோ அல்லது வேறு எந்த சாமான்களையோ விட்டுவிடும்படி எனக்கு யோசனை கூறினால், நான் தயங்காமல் அவ்வாறே செய்திருப்பேன்.

காந்தியடிகளின் சரிதம்.

வீட்டில் சத்தியாக்கிரகம்.

காந்தியடிகள் "நவஜீவன்" பத்திரிகையில் எழுதியது.

ஆனால், இருக்கட்டும்; யாதொரு வைத்திய யோசனையுமில்லாமல், நான் உப்பையும் பருப்பையும் ஒரு வருஷத்துக்கு, நிறுத்தி வைக்கிறேன். நீ விட்டாலும் விடாவிட்டாலும் பாதகமில்லை.

அவள் பிரமித்துப்போய் வியப்படைந்தாள். துயரத்திலாழ்ந்து அவள் கதறியதாவது:— "தயை செய்து, என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய தன்மையை அறிந்திருந்தும், நான் உங்களுக்குக் கோபம் உண்டாக்கியிருக்கக் கூடாது. இந்த சாமான்கள் எனக்கு வேண்டாமென்று நான் வாக்குக் கொடுக்கின்றேன். ஆனால், கிருபைகூர்ந்து, தங்களுடைய விரதத்தைத் திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள். அதை என்னால் பொறுக்கமுடியவில்லை."

"இந்த சாமான்களை நீ விட்டுவிட்டது மிகவும் நல்லதுதான். இவைகள் இல்லாமல், நீ அதிகமாய் சுகப்படுவாய் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. என் சம்பந்தப்பட்டவரையிலும் நான் எடுத்துக்கொண்ட விரதத்தினின்றும் திரும்ப முடியாது. அது எனக்கு நன்மை உண்டாக்கும். ஏனெனின், தூண்டுதலெதுவாயினும்; எல்லா நோன்புகளும் மனிதனுக்கு, சுகத்தையளிக்கும். எனவே, என் போக்கில் நீ என்னைவிட்டுவிடுவாயாக! அது எனக்குச் சோதனையாகும். உன்னுடைய தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு, இது ஆதாரமாகவும் இருக்கும்."

எனவே, அவள் என்போக்கிலேயே என்னை விட்டு விட்டாள். "நீங்கள் நிரம்பப் பிடிவாதக்காரர். நீங்கள் நான் சொல்லுவதைக் கேட்கமாட்டீர்கள்" என்று சொல்லி, கண்ணீர் விட்டு ஆறுதலடைந்தாள்.

இந்த நிகழ்ச்சியை, சத்தியாக்கிரகத்தின் ஒரு உதாரணமாக நான் கருதுகின்றேன். அதன் நினைப்பே எனக்கு இனிப்பைத் தருகின்றது.

இதன் பின்னர், கஸ்தூரிபாய் விரைவில் சுகமடைந்து கொண்டு வந்தாள்—அது உப்பும் பருப்புமில்லாத உணவின் பயனோ, அந்த உணவிலேயே பின்னர் உண்டான மாறுதல்களின் பயனோ, வாழ்க்கையின் ஏனைய விதிகளை நான் கடுமையாய் அனுஷ்டிக்கவேண்டுமென்று கவலையுடன் பார்த்து வந்ததன் பயனோ, இந்த நிகழ்ச்சியினால் ஏற்பட்ட மனவெழுச்சியின் பயனோ, எதுவென்றும் எவ்வளவு தூரமென்றும் என்னால் சொல்லமுடியாது; ஆனால், அவள் விரைவில் குணமடைந்தாள். உதிரப்பெருக்கு அறவே நின்று விட்டது. வைத்திய சம்பந்தமான எனது கீர்த்தி சிறிது பெருக்கமடைந்தது.

என்னைப்பற்றியோவெனில், இந்த சாமான்களை உட்கொள்ளாததினால், நான் இன்னும் அதிகமான சுகத்தை அடைந்தேன். மறுத்த இந்தப் பொருள்களின் பேரில் எனக்கு மீண்டும் விருப்பமேற்படவில்லை. ஆண்டு கழிந்தது; புலன்கள் அடங்கிவருவதைக் கண்டேன். இந்தச் சோதனை, என்னுடைய தன்னடக்க ஆவலைத் தூண்டிற்று. இந்தியாவுக்கு வந்தபின்னரும் நெடுநாள் வரையிலும் இவைகளை நான் உட்கொள்ளவில்லை. ௧௯௧௪-ம் ஆண்டில் நான் லண்டன் நகரிலிருந்தபொழுது, ஒரே ஒரு தடவை இந்த இரண்டு பொருள்களையும் உட்கொள்ள நேர்ந்தது. ஆனால், அந்த சந்தர்ப்பத்தையும், எவ்வாறு நான் இரண்டு சாமான்களையும் உட்கொண்டேன் என்பதையும் பற்றி பின்னர் ஒரு அத்தியாயத்தில் கூறுகின்றேன்.

உப்பும் பருப்புமற்ற உணவை உட்கொள்ளுமாறு, தென்னாப்பிரிக்காவில் எனது சகாக்களைத் தூண்டியிருக்கிறேன். இந்த சோதனையில் நற்பயனும் ஏற்பட்டிருக்கிறது. உப்பும் பருப்புமற்ற உணவைப் பற்றி, வைத்திய சம்பந்தமாக, அபிப்பிராய பேதமிருக்கலாம், ஆனால், இவைகளை மறுப்பதனால் ஆத்மாவுக்கு நன்மையுண்டென்பதில் எனக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை. யோகியினுடைய உணவு, போகியினுடைய உணவினின்றும் மாறுபட்டிருக்கவேண்டும், அவர்களுடைய வாழ்க்கை முறைகள் வேறுபட்டிருப்பதுபோல. பிரம்மசரியத்தில் ஆவலுள்ளவர்கள் போகவாழ்க்கைக்குரிய முறைகளைக் கைக்கொள்ளுவதால், தங்களுடைய நோக்கம் பலிக்காதவாறு செய்துகொள்ளுகிறார்கள்.

கமிஷனுக்கு நிகழப்போகும் கதி.

டாக்டர் பெஸண்ட்:—கமிஷன் நண்பர்களே! வாருங்கள். அந்நியரை உபசரிப்பதில் பெயர் போனது இந்தியா. நீங்கள் செய்யவிருப்பது என்னவாயினும், அது எவ்வளவு பயனற்றதாகுமாயினும் பாதகமில்லை; இரண்டு இந்தியர்மட்டில் சேர்ந்திருந்தால், உங்களுக்கு நல்வரவேகிடைக்கும்.

முழு வெள்ளைக்கமிஷன்:—அந்தோ! என்ன இது! இவையெல்லாம் சட்டசபைக் கூடங்களல்லவா? யாவும் இவ்வாறு காலியாய்க் கிடப்பதன் பொருளென்ன? நேர்த்தியான வரவேற்பு எங்களுக்குக் கிடைக்குமென்று சொன்னீர்களே! நாங்கள் மூலையிலே கிடக்க வேண்டி வந்துவிடும்போலிருக்கிறதே!

திரு. சீனிவாச அய்யங்கார்:—ஸர் ஜான்! ஆச்சரியமென்ன! இங்கே உங்களுக்கு நிகழப்போகும் கதி என்ன வென்பதை முந்தியே தான் நாங்கள் சொன்னோம். ஏகாதிபத்தியப் பித்துப்பிடித்தவருள் தலைசிறந்த நிற்கும் பர்க்கன்ஹெட் பிரபுவின் வார்த்தையை நீங்கள் நம்பி ஏமாந்தீர்கள்!

பர்மா கவர்னர்.

தனவணிகரைப்பற்றி.

விலகிச்செல்லும் பர்மா கவர்னருக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சங்கத்தார் ரங்கூனில் உள்ள ஜுபிளிஹாலில், ஒரு பிரிவுபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். விலகிச் செல்லும் கவர்னரான ஸர் ஹார்க்கோர்ட் அவர்கள் அளித்த பதிலின் சாரம் வருமாறு:—

"இந்த மாகாணம் முழுவதும் மெல்ல மெல்ல, ஜாக்கிரதையாக, சிறந்த லேவாதேவி முறை ஒன்றை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். செட்டிமார் உதவி இல்லா விட்டால், பர்மாவில் சென்ற உ௫ அல்லது ௩௦ ஆண்டுகளாக ஆச்சரியப் படத்தக்க விதமாக முன்னேற்றமடைந்திருக்கும் லேவாதேவி (பாங்கிங்) முறை அத்தகைய முன்னேற்றத்தை ஒருபொழுதும் அடைந்திருக்க முடியாது. விவசாயிகளுக்கு, செட்டிமார் அவசியமான பணவுதவியை அளித்திருக்கிறார்கள். மேலும், தங்கள் முதலும் வட்டியும்பற்றிய மட்டில், ஒழுங்காகத்திரும்பிச் செலுத்துமாறு அவர்கள் வற்புறுத்தி வருவதால், செட்டும் சுருக்கமும் ஜனங்களுக்கு உண்டாயிருக்கிறது. உ௫ ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட மிக அதிகச் செல்வமுள்ளவராக, பர்மியர் இப்பொழுது இருந்து வருகிறார்கள். இந்நிலை ஏற்பட்டதற்கு, செட்டிமார் வந்தனைக்குரியவராவர்."

மேலும், பர்மாவின் முன்னேற்றத்துக்கான பொதுஜனத் தொண்டில் அவர்கள் ஈடுபட்டுச் செய்த வேலைகளைக் குறித்தும், மகாணத்தில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களைக் குறித்தும் பேசியபொழுது, ரங்கூன் யூனிவர்ஸிடி தர்ம நிதிக்கு அவர்கள் சமீபத்தில் ஒரு லட்சரூபாய் அளித்த நன்கொடையைக் குறிப்பிட்டுக் கூறினார்.

அன்சாரி.

சென்னைக் காங்கிரசுக்குத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும், திரு. அன்சாரி அவர்கள், டிசம்பர்மீ உ௨௨ சென்னை வந்து சேருவார் என்று தெரிகிறது.

அடிகள் விஜயம்.

மகாத்மா காந்தியின் தஞ்சம் விஜயம் முடிவுபெற்றது. அந்த வசூலான தொகைகளின் மொத்தம் உ௫,௦௦௦ ரூபாய்க்கு மேலாகும். சீமதி ஸ்லேடு, திரு. ராஜகோபாலாச்சாரியார், திரு. சுப்பய்யா, திரு. நாகேசுவரராவ், திரு. கொண்டா வெங்கடப்பய்யா ஆகியவர் காந்தியடிகளுடன் பிரயாணம் செய்தார்கள். தஞ்சை ஜில்லா சுற்றுப்பிரயாணத் திட்டம் கடுமையாக விருந்தபடியால், உக்கல் சுற்றுப்பிரயாணத் திட்டத்தில் இடங்கள் குறைக்கப்பட்டன என்று தெரிகிறது.

காரைக்குடி சுகாதாரச் சங்கம்.

நாளது கார்த்திகைத்திங்கள் ௨௪-ம் நாள் இவ்வூர் ஹிந்து மதாபிமான சங்கத்தில் த. ராமகிருஷ்ண ஆச்சாரியார் தலைமையில் காரைக்குடிச் சுகாதாரச் சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவர்கள் இவ்வருஷத்திற்கு உத்தியோகஸ்தர்களாக நியமனம் செய்யப் பெற்றார்கள்:—திருவாளர். சொ. முருகப்பசெட்டியார், தலைவர்; ஜெர்மன் டாக்டர் டி. ஆர். என். ராவ், உபதலைவர்; ஆ. வி. லெ. அருணாசலச் செட்டியார், காரியதரிசி; முரு. அருணாசலச் செட்டியார் உபகாரியதரிசி; நிர்வாக அங்கத்தினர் ௧௧ பேர் என்று காரியதரிசி எழுதுகிறார்.

பொருள் அடக்கம்.

வர்த்தமானம்:—முற்போக்கு க
மகாத்மாவின் வர்ணாச்சிரமம். உ
காரைக்குடி நம். ௩, ௪
துருடா, செவிடா? (படம்) ௫
மதிப்புரை. ௬
செய்திகள். ”
சங்கிரகம். ”
குதிரைப்பந்தயம் (படம்) ௭
சாந்தியடிகளின் சரிதம். ௭
பர்மா கவர்னர், தனவணிகரைப்பற்றி. ”
தமிழனுக்கு கிடைப்போகும்கதி (படம்) ”
தலையங்கம்:—வீரர் நாள். அ
உபதலையங்கம்:—ராயல் கமிஷன். ”
இடி முழக்கம். கூ
உள்ளூர். ௰
வடிதங்கள் ”
சப்பன். ”
தந்தி. ”

மன்னவர் நமக்கும்அஞ்சேன்
மாண்பெரும் நாட்டிற் காக
என்னுயிர் தனையும் ஈவேன்
எதற்குமியான் யாண்டும் அஞ்சேன்
பன்னரும் பாரதத்தாய்
பண்டைவாழ் வெய்தப் பாரில்
ஒன்னலர்க் கஞ்சா நல்ல
ஊழியம் தலைமேற்கொண்டேன்.

ஊழியன் காரைக்குடி
பிரபவ—ஹு கார்த்திகை-மீ உஅ௨

வீரர் நாள்.

வீரம்பெற வேண்டிய மக்கள் வீரர் நாளைப் போற்ற வேண்டும் என்று விளம்ப வேண்டுவதில்லை. சிரத்தானந்த வீரர் கொலையுண்டு ஓராண்டு முடியப் போகின்றது. அவர் டிசம்பர் உ௩-ம் நாள் மாண்டார். அப்பெரியாரின் நினைவுக்குறியாக டிசம்பர் பனிரெண்டாம் நாளைக் கொண்டாட வேண்டும் என இந்து மகா சபைத் தலைவர் டாக்டர் மூஞ்சே மொழிகின்றார். மற்றொருவர் டிசம்பர் ஒன்பதாம் நாளில் விழா வயர்தல் வேண்டும் என விளம்பினர். பெரியார் பிரிந்த இருபத்து மூன்றும் நாளினும் விழா வெடுக்கலாம். அன்றித் திதி நட்சத்திரம் முதலிய வற்றும் வைத்துக் கொள்ளலாம். நாள் எதவானுலென்? ஆனால் இந்தியா வெங்கும் ஒரேநாளில் ஒன்று குறித்து விழா வாடினுல் நன்மை இருக்கும். அது அமைவதில்லை, எந்நாள் திருநாளும் பலபடியாகவே நடைபெறக் காண்கின்றோம்.

உலகம் மதிக்க வீர வாழ்வு வாழ்ந்து உடல்விட்ட உயர்ந்தோரை நாள் தோறும் நினைவு கூர்தலும் நல்லது. இன்றேல் ஆண்டு தோறுமாவது அவர் செயலை நினைவுக்குக் கொணரலாம். ஈண்டு எடுத்துக்கொண்ட சிரத்தானந்த வீரவரலாற்றை விரிவாக எழுதவேண்டிய அவசியமில்லை. சென்ற ஆண்டு வரை அவ் அறிஞர் இவ் வுலகில் வாழ்ந்தார். போன டிசம்பர் உ௩-ல் ஒரு முகம்மதியரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்ட அப்துல் ரஷீத் என்பார் சமீபத்திலேயே தூக்கிலிடப் பட்டார். சமீப நிகழ்ச்சியாகலின் சிரத்தானந்த வீரர் செயல் அனைவருக்கும் நன்கு தெரியும்.

உலகில் கோடிகோடி மக்கள் பிறக்கின்றனர்; இறக்கின்றனர். அவரனைவரின் நாட்களை—செயல்களை மக்கள் உன்னுவதில்லை; உன்ன வேண்டுவதுமில்லை. அரிய செயல் ஆற்றி மாண்ட அறிஞர்களின் செயல்களை இறவாது காத்தல் மக்கள் கடன். அத்தகைய சிரிய சிலருள் சிறந்த ஒருவர் சிரத்தானந்த சுவாமிகள். சிரத்தானந்த சுவாமிகள் எழுபத்தொரு ஆண்டுகள் இவ் உலகில் வாழ்ந்தார். அவரது வாழ்வு உயர்ந்த தன்மை கொண்டது. அப்பெரியார் சாவு மிகவும் சிறப்புப் பொருந்தியது. அது அருமையாக ஒரு சிலர்க்கே கிடைக்கத்தக்கது. இயேசு நாதரின் சாவும் சிரத்தானந்தரின் சாவும் ஒரே தன்மை கொண்டது. இருவரும் கொள்கைக்காகவே உயிர் கொடுத்தார். ஆனால் முன்னவர் வெளிப்படையாகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். பின்னவர் மறைமுகமாகச் சுட்டுக் கொல்லப் பட்டார். கொள்கைக்கு உயிர் கொடுத்த அளவில் இயேசுநாதரை நிகர்க்கின்றார் சிரத்தானந்தர் என்று இயம்புதல் தவறாகாது.

இன்ன செயல்வல்ல வீரர்களின் நாளைக் கொண்டாடும் உரிமை மக்களாய்ப்பிறந்த அனைவர்க்கும் உண்டு. இதில் எவ்வித வேறுபாடும் வேண்டுவதில்லை. இவ் உரிமையை வலித்து கொள்தலே அறிஞர்கடன். பெரியார் நாட்களைக் கொண்டாடுவதென்பதை ஆண்டுக்கொருமுறை கூடி எதையேனும் வாயாற்பேசிவிட்டு எழுந்து போதல் என்ற அளவிற் கொள்தல் விரும்பத்தக்கதல்ல. அதைவிட அவர் செயலில் ஒரு சிறு பகுதியேனும் செய்து காட்டுதல்—அதற்கு முயல்தல் ஆயிரம் மடங்கு மேல். அது ஒரு சிலர்க்கே சாலும். வாய்ப்பேச்சு மட்டும் வல்லார் அது செய்ய எங்ஙனம் ஆற்றுவர்? சிரத்தானந்த வீரரைப் போல் உயிர் கொடுக்க முந்தாதுபோயினும் சீர்திருத்த வீரர்கள் வாய்ப்பேச்சளவின்றும் ஒருபடியாவது உயர்ந்தவா முயல்தல் நாட்டுக்கு நலந்தரும். சிரத்தானந்தரைப் போல் கொள்கைக்கு உயிர் கொடுக்க ஒரு சிலராவது முனைந்தாலன்றி விடுதலை கிட்டப்போவதில்லையென்பது உறுதி. காசுக்குக் கொள்கையை விற்போர் மலிந்ததாகவே உலகம் இருந்த போதினும் சிரத்தானந்தரைப் போற் சிலரிருத்தல் கூடும் என நம்ப இடமுண்டு.

ராயல் கமிஷன்.

ராயல்கமிஷன் பகிஷ்காரம்செவ்வனே நடைபெற வேண்டுமானால், சில முறைகள் கையாளப்பட வேண்டுமென்றும் அவ்வகைளைப்பற்றிப் பின்னர் விரிவாக எழுதுவோம் என்றும் நாம் கூறியிருந்தோம். கமிஷனைப் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்பதில் பொதுவாக இந்தியாவிலும், சிறப்பாகத் தமிழ் நாட்டிலும், அபிப்ராய பேதமிராது என்றகருத்துடன், முறைகளைப்பற்றி எழுதுவதாகக் கூறியிருந்தோம். ஆனால், பகிஷ்காரத்தைப் பற்றி, தமிழ் நாட்டில் அபிப்ராய பேதமிருப்பதாக, இப்பொழுது தெரியவருகிறது. பிராமணரல்லாதாரின் சுயமரியாதைக்காக உழைக்கும் கூட்டத்தார்கள்ராயல்கமிஷனைப்பகிஷ்காரம் செய்யலாகாது என்று பிரசாரம் செய்து வருகின்றார்கள். இது வருந்தத்தக்கதே. அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்டுக்கிடத்தல் சுயமரியாதைக்கு எள்ளளவும் பொருத்தமுள்ளதல்ல என்று பிராமணரல்லாதார் அனைவரும் ஒரு முகமாகக் கருதுதல் வேண்டும். பொருளற்ற சடங்குகளும் சமயத்தாகர்களும் வேண்டாமென்றால், அரசியலில் அந்நிய நாட்டுத்தாகர்களும் இனித் தேவையில்லை என்று கொள்ளுவதுதான் தருக்கத்துக்கும் சுயமரியாதைக்கும் இசைந்ததாகும். பகிஷ்கார சம்பந்தமாக, "தமிழ்நாடு" பத்திரிகையும் "லோகோபகாரி"யும் தமிழர்களுக்கு நன்மதி கூறியிருப்பது பாராட்டத்தக்கதாகும் நாட்டின் ஒற்றுமைக்காகப்பாடுபடுவதுதான் உண்மையான தொண்டாகும். அச்சமும் சந்தேகமும் குடி கொண்டிருக்கும் நாட்டிலே, மேற் கூறிய பலவீனத்தை வளர்க்கும் உணர்ச்சிகளுக்கு மனுப்பண்ணிக் கொள்ளுவது எளிதான வேலையாகும். எடுத்த காரியம் இனிது நிறைவேறுது என்று நூற்றில் தொண்ணூற்றென்பது பேர்கள் இப்பொழுது கூறிவருகின்றார்கள். ஆனால் நூற்றிலொருவராயிருந்த—ஏன் இலட்சத்தில் ஒருவர் என்றும் கூறலாம்—காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியார் "எடுத்த காரியம் யாவினும் வெற்றி" என்று சங்குநாதம் செய்தார். அனுபவத்துக்கு ஏற்றதல்ல என்று பாரதியாரின் பாடலை நாட்டார் தள்ளிவிட்டார்களா அல்லது போற்றுகின்றார்களா? நண்பர்கள் நிதானித்துத் தீர்ப்புச் சொல்லலாம்.

பொய்யும் சூதும் உறைவிடம்பெறுமல் உலகத்தை விட்டோடிவிடும் என்று சொல்லுவதற்கில்லை, சூழ்ச்சிக்காரர்களும் சுயநலப்புலிகளும் உலகத்திலே இருந்தே தீருவார்கள். அவர்களைக் கண்டு பயந்து, நல்லவர்கள் தங்கள் கடமையைச் செய்யாதிருக்க முடியுமா? கடமையை உணர்ந்து அதைச் செய்யத் தவறியவர்கள் கோழைகள் என்றும் துரோகிகளென்றும் பின் சந்ததியார்களால் மதிக்கப்படுவார்கள் என்பது உறுதி. பகிஷ்காரம் வெற்றிபெறுமா, வெற்றி பெறுதா என்பது யோசிக்கப் படவேண்டிய கேள்வியல்ல. நோயாளி பிழைப்பானா, இறப்பானா என்று முன் கூட்டியே தெரிந்துகொண்டு, எவரும் மருந்து கொடுப்பதில்லை. பிழைப்பானென்றாலும் இறப்பானென்றாலும் தெரிந்துபோனால், மருந்தே தேவையில்லை. சந்தேகமாயிருப்பதனாலே தான், மருந்து தேவையாகும். சந்தேகத்தினால் மனச்சோர்வு ஏற்படும் காலத்திலேதான், மனிதன் தனது கடமையைப்பற்றி உணர்ச்சி கொள்ளுவது செயல்முறையின் இரகசியமாகும். எதையும்பற்றி பன்னிப் பன்னி யோசித்துக் கொண்டிருந்தால், மனிதனுடைய முயற்சி வீணாகிப் போய்விடும் என்று கொண்டுதான், பெரியார்கள் கடமையின் தேவையை உணர்ந்து, அதை உலகத்துக்குப் போதித்துள்ளார்கள். மனிதனுடைய சக்தி வளருவதற்கு, கடமை இன்றியமையாதது என்று கூறவும் வேண்டுமா? கண்களை மூடிக்கொண்டு—இதற்குக் குருட்டுத்தனமாய் என்று எவரும் பொருள் கொள்ளவேண்டாம்; யாதொரு சஞ்சலமுமில்லாமல் என்று பொருள் கொடுக்க வேண்டும்—இந்திய மக்களனைவரும் இப்பொழுது செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு. அதுதான் பகிஷ்காரம்.

நாட்டின் ஒற்றுமையும் பகிஷ்காரமும், ஒன்று மற்றொன்றின் தொடர்பாகும். ஒற்றுமை ஏற்பட்ட பின், பகிஷ்காரத்தில் இறங்க வேண்டும் என்று கூறுபவர்களுக்கு உலக சரித்திரத்தின் அறிவு மிகுதியாக இல்லை என்று கூறிவிடலாம். எவ்வளவுக்கெவ்வளவு பகிஷ்கார முயற்சியை ஒரு கூட்டத்தார் உள்ளன்புடனும் உறுதியுடனும் கைக்கொள்ளுகின்றார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அந்தக் கூட்டத்தார், நாட்டாரை ஒற்றுமைப் படுத்த முடியும். இந்தியாவில் சுயராஜ்ய ஆவல் ஏற்பட்டது தனியொரு மனிதனாலே. "எல்லோரும் ஒருமனப் படும் வரையில், நான் சுயராஜ்யத்தைப்பற்றி, போதிக்கப் போவதில்லை" என்று திலகர் பெருமான் கருதவில்லை. சுயராஜ்ய ஆவலை இந்திய மக்களுக்குள் ஏற்படுத்தி விட்டால், அதனாலேயே நாட்டில் ஒற்றுமை உண்டாகிவிடும் என்று திலகர் கண்டார். அவர் கண்டது உண்மை. பல காரணங்களால், பல கூறுகளாகப் பிரிந்து கிடக்கும் இந்தியர்களுக்குள் ராயல் கமிஷன் பகிஷ்கார ஆவலைப் பரப்பினால், நாடு ஒற்றுமைப் பட்டுவிடும் என்பதில் ஐயமேயில்லை.

"சுயராஜ்யப் போராட்டத்தால், வரி உயர்ந்தது. கொடிய சட்டங்கள் தோன்றியுள்ளன; அதனால் நாட்டுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களைச் சொல்லி முடியாது. எனவே, சுயராஜ்யப் போராட்டம் வேண்டாம்" என்று கூறுபவர்களை அறிவிலிகள் அல்லது கோழைகள் என்று சொல்லுவதைத் தவிர, வேறு ஏதேனுமுண்டோ? "பகிஷ்காரம் கூடாது; பகிஷ்காரம் தேவையில்லை; பகிஷ்காரம்பலிக்காது" என்று எதையேனும் ஒன்றை விடாமல் சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்குப் பெரிய காரியம் செய்வதில் நாட்டமில்லை என்று கூசாமல்கூறிவிடலாம். மனிதர்களுடைய சிறிய தன்மைகளுக்கு மனுப்பண்ணிக் கொள்ளுவது மனிதர்களின் பலவீனத்தை வளர்க்க முயற்சி செய்வதாகும். மூலம் முடிவு தெரியாத உலகத்தில் தோன்றியிருக்கும் மனிதனுடைய உள்ளத்தில் அச்சம் குடி கொண்டிருப்பது இயல்பேயாகும். அந்த அச்சத்தை வளர்ப்பதா? அல்லதுமாய்ப்பதா? வளர்க்கும் வேலை எளிது. மாய்க்கும் முயற்சி கடினமானதாகும். எந்த வேலை அசாத்தியம் என்று தோன்றுகின்றதோ அல்லது கூறப்படுகின்றதோ அது சப்பந்தமாக முயற்சி செய்து தோல்வியுற்றாலும் அது மதிக்க முடியாத பெரிய வெற்றியாகும். ஒரு நோய்க்கு இது தான் மருந்து என்று சிறப்பாகக்கூற முன்னர், எத்தனையோ மருந்துகளைப் பிரயோகம் செய்து, சோதித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய சோதனை முயற்சி பாராட்டற்குரியதா அல்லது இகழ்ந்து கூறுவதற்குரியதா? போற்றுதலும் தூற்றுதலும் ஒருபுறமிருக்க, இது தேவையா, அல்லவா என்பதைத் தான் கவனிக்க வேண்டும். உலகத்தின் அறிவும் ஆற்றலும் வளர்ந்தது மாண்புமிக்க தோல்விகளாலே என்பதை, நாம் என்றைக்கும் மறவாதிருப்போமாக!

"அன்னியவரசுபொன்னாசாயினும், அது தன்னரசுக்கு ஈடாகாது" என்று காலஞ்சென்ற ஆங்கில முதல் மந்திரி ஸர். காம்பெல் பானர்மான் அவர்கள் அழுத்தமாகக் கூறி, தென்னுப்பிரிக்கா போயர்களுக்குச் சுய ஆட்சி வழங்குவதற்கு, அதை ஆதாரமாகக் காட்டினர். ஆங்கிலேயர்கள் செய்த தானத்துக்கு இந்த மேற்கோள் ஆதரவாய் நிற்கையில், இந்தியர்களின் உயிர்வாழ்விற்கும், உயர் வாழ்விற்கும், தேவைக்கும் இதை ஆதரவாகக் கொண்டு, ராயல் கமிஷனை பகிஷ்காரம் செய்வது எல்லாவகைகளிலும் பொருத்தமுள்ளதாகும். தேவையைக் கருதித்தான் உலகத்தில் பொருத்தத்தைக் கூறுவார்கள். "ஸப்தரிஷிகள்" கொண்ட ராயல் கமிஷன் இந்தியாவின் போக்கை நிர்ணயிக்கும் ஆற்றலும் உரிமையும் கொண்டதல்ல என்று சுயமரியாதை கொண்ட இந்தியன் உறுதியாகப் பிடித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பகிஷ்காரவிஷயத்தில் இப்பொழுது கூக்குரலிடும் கூட்டத்தாரில் பெரும்பான்மையோர் பலவிதக் காரணங்களைக்கொண்டு, பகிஷ்காரத்தினின்று விலகிக் கொள்ளட்டும். அதனால் குடிமுழுகிப்போய்விடாது. பகிஷ்காரத்தின் தேவையும் பொய்ப்பட்டுப் போய்விடாது. என்றைக்காவது கூற்றுவன் வருவான் என்பது எத்தனை உண்மை கொண்டதோ, அதேபோல் பகிஷ்காரத்தை அதாவது ஒத்துழையாமையை பூரண அளவில் என்றைக்காவது இந்திய மக்கள் கைக்கொள்ள வேண்டும். முட்ட முன் குனிவதும், ஆபத்துவராமல் பார்த்துக்கொள்ளுவதும், தீர்க்காலோசனையுடன் முன்கூட்டியே காரியத்தைச் செய்வதும் அறிவுடையவர்களின் செயலாகும். அறிவுகலந்த செயலைத் தமிழர்கள் செய்வார்களாக! சந்தேகமும் பலவீனமும் நிறைந்த யோசனையைத் தமிழர்கள் தள்ளிவிடுவார்களாக!

இடி முழக்கம்.

தேசபக்திப் பிரேரேபணை.

சென்னைக்காங்கிரஸில் இரு பிரேரேபணைகள் கொணரப்போவதாக, டாக்டர் பி. என். முகர்ஜீ அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒருபிரேரேபணையைத் தேசபக்திப் பிரேரேபணை என்று சொல்லலாம். காங்கிரஸில் சேரும் ஒவ்வொருவரும், "முதலில் தான் இந்தியன்; பின்னரே, கிருஸ்தவன், இந்து, முஸல்மான் அல்லது பிற எதுவும்" என்று பிரமாணம் செய்விக்கப்பட வேண்டும் என்பதாகும் அது. உண்மையான தேசபக்தி இல்லாதவன் 'பிரமாணத்துக்குப்' பக்தி செலுத்துவான் என்பதற்கு மட்டில் ஜாமீன் என்ன இருக்கிறது என்ற கேள்வியும் கேட்கப்படக்கூடும். எனினும், இத்தகைய பிரமாணத்துக்கு வேறுபல மதிப்பும் உண்டு என்பதை நண்பர்கள் அறியவேண்டும். "உன்னிடத்திலுள்ளதையெல்லாம் விற்றுவிட்டு என்னிடம் வா" என்று இயேசுகூறினர். "உன்னிடத்திலுள்ளதையெல்லாம் வைத்துக்கொள். ஆனால் என்னை முதன்மையாகக் கருது" என்று காங்கிரஸ் ஒலிக்க வேண்டியது இத்தருணத்தில் மிக மிகத் தேவையாகவே இருக்கிறது. "எது உண்மையான தேசபக்தி" என்பதை விளக்கிக்கூறும் ஒரு சடங்கு, காங்கிரஸில் நுழைக்கப்பட வேண்டிய நிலையில், காங்கிரஸின் உறுப்பினர் பலர் இதுகாலை இருந்து வருகின்றனர் என்பது மிகையாகாது.

தேவைதான்.

முகர்ஜீயின் மற்றொரு பிரேரேபணையின் கருத்தும் நல்லதேயாகும். ஒத்துழையாமைக் காலத்தில், பலர் தத்தம் உத்தியோகங்களையும் பதவிகளையும் விட்டுவிட்டார்கள். ஆனால், அவர்களிற் பலர், வறுமையின் வலியால், திரும்பவும் அவரவர் பதவிகட்கு இழுக்கப் பெற்று விட்டார்கள். அவர்களை மறுபடியும் தேசத்தொண்டில் ஈடுபடச்செய்வதற்காக, அகில இந்தியத்தேசியத் தொண்டு நிதி ஒன்று உடனே தவங்கவேண்டும் என்பது இந்தப் பிரேரேபணை. தேசியக் காங்கிரஸ், தேசீயத் தொண்டுநிதியொன்றைத் துவங்கவேண்டியது மிகுதியும் அவசியமேயாகும் ஆனல், அந்த நிதி எப்படி விநியோகிக்கப் படவேண்டும் என்பது பெரிதும் ஆழ்ந்து ஆலோசித்துமுடிவுக்கு வரவேண்டிய சங்கதியாகும். வெறும் பேச்சுக்கு மட்டில் அதைச் செலவு செய்து விடுவது பயனற்றதாகும்; மேற்கொண்டு, அது தீங்கும் செய்வதாகும். நாட்டின் ஆக்க வேலைக்குரிய துறைகளை நிர்ணயம் செய்துகொண்டு, தனியாசென்று போல அதை நடத்துதல் பெரிதும் அவசியமாகும். இதற்கு, கதர்த் துறையை ஒரு உதாரணமாகக்கூறலாம்.

ஏன் இவ்வளவு 'கடினம்'?

காங்கிரஸ் பொருட்காட்சிக்கு பதினயிரரூபாய் அளிக்கவேண்டுமென்று சென்னைக் கார்ப்பொரேஷனில் ஓர் தீர்மானம் வந்தது. காங்கிரஸ் சார்பில் நடக்கும் ஒருபொருட்காட்சிக்குப் பணம் கொடுக்கக்கூடாதென்று ஒருசிலர் எதிர்த்தார்கள். அவர்கள், தங்களுக்கும் காங்கிரஸில் பற்றிருப்பதாகக் கூறிக்கொள்வோரேயாவர் என்பதை இங்கு குறிப்பிடவேண்டும். திற்க, காங்கிரஸ் பொருட்காட்சிக்குப் பணம் கொடுப்பதென்ற தீர்மானம் கார்ப்பொரேஷனில் நிறைவேறிவிட்டது. எனினும், தொகை ஆயிரம்ரூபாய் அளவாகக் குறுகிவிட்டது. சென்னை அரசாங்கம் கூட, காங்கிரஸ் பொருட்காட்சிக்குப் பணம் உதவும் பொழுதுசென்னைக் கார்ப்பொரேஷனில் எதிர்ப்பும், பின்னர் தொகைக் குறைப்புமாக, இவ்வளவு கடினம்' இக்காரியத்தில் செய்யப்பெற்றது பெரிதும் வருந்துதற்குரியதாகும். அதிலும், காங்கிரஸில் பற்றிருப்போராகச் சொல்லிக்கொள்பவர், கார்ப்பொரேஷனில் வந்த பிரேரேபணையை எதிர்த்தது விந்தை என்பது ஒருபுறமிருக்க, எவருக்கும் இனிக்கக்கூடியதுமன்று.

ஒரு வெற்றி.

கரக்பூரில், ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தமொன்று நடைபெற்றது. அது முடிவு பெற்று, டிசம்பர்மீ அ௨ நாலை ரயில்வே தொழிற்சாலைகள் மறுபடி திறக்கப்பெற்றன. வங்காள நாகபுரி ரயில்வே இந்தியத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், இதைத் தொழிலாளர்களுக்கு ஒரு வெற்றி என்றே குறிப்பிடுகிறார். ராஜியின் விவரங்களை, அவர் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறார். தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருந்த காலத்துக்கும் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு ரயில்வே அதிகாரிகள் இசைந்தனர் என்பது, இதில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். வேலை நிறுத்தம் நியாயமானது என்பதை ரயில்வே அதிகாரிகள் ஏற்றுக்கொண்டதற்குச் சமமாகும் இது. எனவே, இதுவே ஒரு வெற்றியல்லவா? திற்க, பதினாயிரம் தொழிலாளர் ஒன்றுபட்டு, பொறுமையுடன் இருந்து, எதிர்ப்பிரசாரத்தால் மயங்காமல், சங்கத்தில் பெருமித நம்பிக்கை வைத்து நடந்துவந்ததை, திரு. கிரி பாராட்டியுரைத்திருக்கிறார். நியாயமான போராட்டம் எதுவும், பொறுமையுடனும், ஒற்றுமையுடனும், நம்பிக்கையுடனும், மனக்கலக்கமின்றியும் நடத்தப்பெறின், வெற்றி நிச்சயம் என்பதை உரைக்கவும் வேண்டுமோ?

என்ன வருத்தம்!

மத்திய மாகாணக்கவர்னர் ஸர் வில்லியம் மாரிஸ் அவர்கள் பிரிவுபசாரம் கூறுவதற்காக, ராமபுரி சமஸ்தானத்திற்கு, டிசம்பர் ௨-௨ சென்றிருந்தாராம். சமஸ்தான மன்னர் பேசி முடித்தபின்னர், ஊருக்குச் செல்லும் கவர்னர் பதிலளித்தார். லெப்டினண்ட் கவர்னருக்கு முன்போல, சுயேச்சை இல்லையென்று அதில் அவர் வருத்தப்படுகிறார்; பிற அபிப்பிராயங்களுக்கும் கிர்ப்பந்தங்களுக்கும் கவர்னர்கள் கட்டுப்படவேண்டியிருப்பதால், சுதேசமன்னர்களிடம் அனுதாபங்காட்டவும், அவர்களின் விருப்பங்களுக் கிசைய நடக்கவும் முடியவில்லை என்று பொருள்பட, அவர்பேசியிருக்கிறார். இப்பொழுதுள்ள பொம்மைச் சட்டசபைகளைக் கண்டே சுதேச மன்னர்கள் பயமடையச்செய்துவிட வேண்டும் என்பது ஸர் மாரிஸ் அவர்களின் எண்ணம் போலும்! இந்திய அரசியல் முன்னேற்றம், இந்திய சமஸ்தான நலன்களுக்குப் பாதகம் விளைக்கக் கூடியது என்ற அச்சம் சமஸ்தானாதிபதிகளுக்கு உண்டாகக்கூடிய பிரசாரங்களை, பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் செய்து வருவது வெறுக்கத் தக்கதாகும்.

உள்ளூர்.

சென்னை உண்டியல் வட்டம்	௭—௪—௦
நக்கன் உண்டியல் வட்டம்	௪—௦—௦
பவுன் (பொற்காசு)	௧௩—௭—௯
வெள்ளி ரூபாவிலை	௦—௧௭—௦

தட்ப வேப்ப நிலை:—
உயர்ந்த அளவு-௮௯
குறைந்த அளவு-௭௦.௦

படத்திறப்பு விழா:— காரைக்குடி யூனியன்போர்டுக்கு இரண்டு முறை பிரசிடெண்டாக இருந்த ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களது உருவப் படத்தை ஷை போர்டு ஆபீஸ் கட்டிடத்தில் வைக்கும்படி யூனியன் போர்டார் தீர்மானித்த வண்ணம் மேற்சொல்லிய படத்தைத் திறக்கும் விழாவானது, காரது டிஸம்பர்-மீ ௯௨ வெள்ளிக்கிழமை மாலை யூனியன் ஆபீஸ் கட்டிடத்தில் நடைபெற்றது. அப்போது தேவகோட்டை டெபுடி கலெக்டர் திரு. எம். ஆர் சங்கரநாராயண ஐயர் அவர்கள், படத்தைத் திறந்து வைத்தார்.

ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை:—இவ்வைத்தியசாலையில் திரு. எஸ். என். பி. சுப்பிரமணியன் அவர்களால் நவம்பர் மாதத்தில் பின்வரும் விபரப்படி வெளி நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யப் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது:—

இந்துக்கள்:—புருஷர், ௪௩௩௦; பெண்கள், ௪௨௦௭; குழந்தைகள், ௭௦௯; தினம் ஒன்றுக்கு வந்தவர் ஏறக்குறைய சராசரி ௪௦௮; மொத்தம் ௯௨௪௬, முகம்மதியர்:— புருஷர், ௨௯; பெண்கள், ௯௨; குழந்தைகள், ௭௪; தினம் ஒன்றுக்குச் சராசரி வந்தவர் ஏறக்குறைய, ௨; மொத்தம், ௯௦. இருந்தவர்:— புருஷர், ௯; பெண், ௪; குழந்தைகள், ௯. மொத்தம், ௪௦. பழைய கேசுகள் ௨௯௫௯; புதிய கேசுகள் ௯௯௦; மொத்தம் ௯௯௯௯.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேச்வர வித்யாசாலை:— இவ்வூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேச்வர வித்யாசாலையில் நாளிது கார்த்திகைமீ ௯௮௨ அன்று உள்ளூர் தனவணிகர் ஒருவரால் மாணவர்களுக்குப் பலகார விருந்து நடைபெற்றது. அதில் வருப்பு வேற்றுமைக்குரிய விஷயங்கள் சில நிகழ்ந்தது வருந்தற்குரியது. முதலாவது மாணவர்களை அழைக்கும்பொழுது ஆசிரியர் ஒருவர், "சூத்திரப் பையன்கள் வாருங்கள் பிராமணப் பையன்கள் இருங்கள்" என்று அழைத்தனராம். பிறகு பார்ப்பனப் பையன்களுக்கு வேறு பந்தியிலும் மற்றப் பையன்களுக்கு வேறு பந்தியிலும், வேறுபடுத்திப் பலகாரம் வழங்கப் பட்டதாம். இதனால் பார்ப்பனரல்லாத மாணவர் பலருடைய மனம் புண்படுத்தப் பட்டதென்று தெரிகிறது. சூத்திரர் என்று பார்ப்பன ஆசிரியர் கேவலமாக அழைத்து, தீண்டாதவர்போல் தனித்திருந்து புசிக்கும்படி செய்தது பார்ப்பனரல்லாத பெருமக்கள் சுயமரியாதையைக் குறைப்பதேயாகும். பார்ப்பனரல்லாதாரால் நடத்தப் பெறும் நிலையத்தில், பார்ப்பனரல்லாதார் நடாத்திய விருந்தில், பார்ப்பனரல்லாத மாணவர்கள் அவமதிக்கப் பெற்றது பொறுக்க

கடிதங்கள்.

சிதம்பரம் நந்தனார் உயர்தரப் பாடசாலை.

மேற்படி பாடசாலை ஆதித்திராவிட மாணவர் சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் சகஜானந்த சுவாமிகளின் அக்கிராசனத்தின் கீழ் பாரதமாதா இழந்த அரியரான ஸர். டி. சதாசிவ அய்யர் ௨-௧-௯௨௮-ல் விண்ணுலகடைந்ததைக்குறித்து ஆதித்திராவிடர்கள் முன்னேற்றத்திற்கே பெருந்துணையாயிருந்தவரென்றும், ௧௯௨௮-ல் சிதம்பரம் நந்தனார் பாடசாலைக் கட்டிடத்திற்காக அஸ்திவாரக்கல் நாட்டி ஷை சுவாமிகள் விரும்பும் போதெல்லாம், நேரிலோ பிறர்க்குக் கடித மூலமாகவோ வேண்டியதைச் செய்தும், பெரியவர்கள் மூலமாய் அரிய காரியங்கள் செய்வித்துமுள்ளார்கள். அவர்கள் பிரிந்தது ஏழை ஆதித்திராவிட ஜனசமூகம் துணை வலி இழந்து என்றும், அவர்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி நன்றியறிதலாக லேடி சதாசிவத்திற்குக் கடிதம் எழுதியும் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோ. லேட்சுமிபுரம்.

ஸ்ரீமீனாட்சிசங்கம்:— இச்சங்கத்தின் இரண்டாவதாண்டு எட்டாவது மாதக் கூட்டம் நாளது கார்த்திகைத் திங்கள் ௧௫-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை ௬-மணிக்கு நாமமண்டபத்தில் இந்நகர் திருவாளர் சொ. மு. பெ. அரு. அருணாசலன் செட்டியாரவர்கள் தலைமையில், சொக்கலிங்க வித்தியாசாலை மாணவர், மாணவிகளால் கடவுள் வாழ்த்துப்பாட, ஆரம்பமாயிற்று. அன்னான்று இந்நகர் திருவாளர்களான, கதி. இராமநாதன், (சொவி மாணவன்) "ஐயமிட்டுண்" என்பது பற்றியும் அரு. வள்ளியம்மை (சொவி மாணவி) "கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்" என்பது பற்றியும், எஸ். ரெங்கசாமி அய்யரவர்கள் (சொவி உதவி ஆசிரியர்) "கற்றவரின் சிறப்பு" என்பது பற்றியும் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவரவர்கள் முடிவுரையாக பல மொழிகள் பகர்ந்தார்கள். திருவாளர் முத்து. முத்துக்கருப்பன் அவர்களாலும். மு.ராம.சுப்பிரமணியன் செட்டியாரவர்களாலும் இன்னிசையுடன் தேவாரப்பாக்கள் பாடப்பெற்று வந்தனோபசாரம் கூறி,தலைவரவர்கட்கு மாலை சூட்டி சந்தன தாம்பூலம் கற்கண்டு வழங்கப் பெற்று, சபை ௯-இ-மணிக்கு இனிது நிறைவெய்தியது என்று காரியதரிசி எழுதுகிறார்.

முடியாததேயாகும். படிக்கும் பிள்ளைகளுக்குள் வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்குவது அச்சமேயே. இந்தப் பள்ளிக்கூடத்திலேயே முன்னைய ஆண்டுகளில் சில முறை பிள்ளைகள் எல்லோரும் கலந்து உணவு உட்கொண்டிருக்கின்றனர். சங்கராச்சாரியார் விஜயத்தி.குப்பின்னரேஇத்தகைய வேற்றுமைகள் வலுப்படுத்தப் படுகின்றன. கலாசாலை அதிபரவர்கள் கவனித்து, இத்தகைய போலி வேற்றுமைகள் நிகழாதிருக்க வேண்டுவன செய்வார்களாக என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கப்பல்.

"ககுலா" கப்பல் இன்று சென்னைத் துறைமுகத்தில் இருக்கிறது. இம்மதி ௨௯௨ புதன்கிழமை அங்கிருந்து புறப்பட்டு நாகப்பட்டினம் வந்து, அவ்விடமிருந்து மார்கழிமீ ௯௨ மலாய்நாட்டுக்குப் புறப்படும்.

"டைரியா" கப்பல் மார்கழிமீ ௯௨ புதன்கிழமை சென்னைக்கு வரும். அ௨ வெள்ளிக்கிழமை அங்கிருந்து புறப்பட்டுப் பினாங்கு செல்லும்.

"எலிபண்டா" கப்பல் இன்று சென்னைத் துறைமுகத்திலிருக்கிறது. மார்கழிமீ ௯௨ வெள்ளிக்கிழமை ரங்கூன் செல்லும்.

"எதியோபியா" கப்பல் மார்கழிமீ ௪௨ திங்கட்கிழமை சென்னைக்கு வரும். அ௨ வெள்ளிக்கிழமை ரங்கூனுக்குப் புறப்படும்.

பட்டமங்கலம் ரஸ்தா.

பட்டமங்கலத்திலிருந்து சொக்கநாதபுரத்திற்குச் செல்லும் ரஸ்தா, சண்டிர மாணிக்கம் திரு. பி. எல். எஸ். டி. எல். கருப்பன் செட்டியாரவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. அதில் தமக்குள்ள பாத்தியங்களை, சிவகங்கைத் தாலூக்கா போர்டுக்கு அவர் சாசனம் செய்து கொடுத்திருப்பதாகவும், ௧௯௨௮-ம் ஆண்டு ஏப்பிரல்மீ ௧௨ முதல் அதன் பாத்தியங்கள் சிவகங்கைத் தாலூக்கா போர்டுக்கு உரியனவாகுமென்றும் தெரிகிறது.

நோட்டீஸ்.

என்னுடைய மகன் ராமன் செட்டியாருக்கு 1927 வருஷம் செப்டம்பர்மீ ௨௨ யுள்ள பஞ்சாயத்தார்கள் தீர்மானம் மூலம் பாகமாகி நாங்கள் இருவர்களும் பிரிந்த குடும்பஸ்தர்களாக இருந்துவருகிறோம். ஷை தீர்மானப்படி என் மகன் ராமன் செட்டியார் தன் பாகத்துக்கு ரொக்கமாக வாங்கிக் கொண்டு விட்டபடியால் சகல குடும்ப ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும், கடைகளும் எனக்கே சர்வ சுதந்திர பாத்தியமாகிவிட்டது. அவைகளில் ஷை ராமன் செட்டியாருக்கு யாதொரு சம்பந்தமும் பாத்தியமுமில்லை. ஷை பஞ்சாயத் தீர்மானத் தேதிக்கு பிறகு ஷை ராமன் செட்டியார் எதாவது கடன் வாங்கும்விஷயத்தில் நானாவது என்னுடைய சொத்துக்களாவது ஷை கடன்களுக்கு ஜவாப்தாரியல்ல என்று இதனால் யாவரும் அறிய வேண்டியது.

1927-௵ டிசம்பர்-மீ 9-௨ } வீ. மரு .வீ. ராமன்செட்டியார், பள்ளத்தூர்.

தந்தி.

(ஊழியனுக்காக வந்த தந்தி)

பினாங்கு பிரபவ கார்த்திகை ௨௭௨

உண்டியல்விலை	நூற்றைம்பத்துநான்கு
ஈயம்	நூற்றுமுப்பத்திமூன்று
ரப்பர்	தொண்ணூற்றுஇரண்டு

ரங்கூன்பிரபவகார்த்திகை ௨௭௨

பவுன் பழையது	௧௩—௯—௯
,, புதியது	௧௩—௬—௬
படகு நெல் (புதியது)	௧௮௪—௦—௦
ரயில் நெல்	௧௮௨—௦—௦
ஸ்பெஷல் அரிசி	௪௯௫—௦—௦
சிறியமில் அரிசி	௪௮௦—௦-௦
பெரியமில்	௪௯௫-௦-௦
மில்சார் அரிசிபுழுங்கல்	௫௨௫,௫௫௦-௦-௦
புழுங்கல் நசேன்	௪௭௫—௦-௦
ஏ. ஒன் குறுனை	௫௯௦—௦—௦
பி. ஒன்.	௪௧௦—௦—௦
மிளகாய்	௮௯-௦-௦
மொச்சை	௯௦௦-௦-௦
தட்டை	௫௦௦,௫௪௦-௦-௦
உளுந்து	௪௫௦,௪௯௫-௦-௦
சிவப்புப் பீனிஸ்	௨௪௫-௦-௦
வெள்ளை பீனிஸ்	௨௯௦-௦-௦
பருத்திக்கொட்டை	௯-௪-௦,௯-௮-௦
வெங்காயம்	௨௭,௨௭-௦-௦
சோளம்	௯௦௦-௦-௦
கொள்ளு	௪௭௫-௦-௦

"இந்து"வுக்கும் மித்திர"னுக்கும்.

திரு. எ. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் ஜனவரிமீ முதல்தேதி முதல் "இந்து" பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப் பெற்றுள்ளார் என்றும் "சுதேசமித்திரன்" ஆசிரியர் பதவியை, திரு. வி. ஆர். சீனிவாஸ அய்யங்கார் ஏற்றுக் கொள்ளுவார் என்றும் தெரிகிறது.

ராம. சொக்கலிங்கனுல், காரைக்குடி "ஊழியன்" அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

END OF ISSUE